Registered as a News Paper பக்கங்கள் 10 விலை ரூபா: 6-00

# ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி

நாதம் 03 திருவள்ளுவர் ஆண்டு 2024 தை 23 (05-02-1993) வெள்ளிக்கிழமை ஓசை 353

## இரவைப் பகலாக்க ரஷ்ய விஞ்ஞானிகள் முயற்சி

இரவைப் பகலாக மாற்றுவது என்ற பரிசோதனையில் ஒரு பகுதியாக ரஷ்யாவின் விண்வெளிக்கலத்தின் பிரமாண்டமான கண்ணாடி ஒன்று நேற்று அதிகாலை சூரிய ஒளிக்கதிரை ஐரோப்பா மீது பரப்பியது. விண்வெளிக் கலத்தில் பொருத்தப்பட்டுள்ள வட்டமான 20மீற்றர் அளவு பிளாஸ்டிக் கண்ணாடி ஒன்று சூரிய ஒளிக்கதிரைப் பாய்ச்சுவதை மீர் விண்வெளி நிலையத்தின் விண்வெளி வீரர்கள் கண்டுபிடித்ததாக மாஸ்கோவின் தரைக் கட்டுப்பாட்டு (10ஆம் பக்கம் பார்க்க)

# வடகிழக்கை துண்டிக்கும் சூழ்ச்சி சமஷ்டி என்ற பெயரில் வருகிறது

## தெரிவுக் குழுவின் முயற்சி தோல்வி தொண்டமான் தலைவருக்கு கடிதம்

(யாழ்ப்பாணம்)

"ஐந்து வருட காலமாக நிலைபெற்றிருந்த வடக்கு - கிழக்கு இணைப்பைத் துண்டிக்க எடுத்த சூழ்ச்சிக்கு சமஷ்டி என்ற போர்வை கொடுக்கப்பட்டது. அரசியல் சாதுரியமற்ற இக்கருத்திற்கு தென்னிலங்கையில் பெரும் வரவேற்பிருந்தது. ஆனால் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் இதனை ஒதுக்கித்தள்ளியது"



இவ்வாறு தலைவர் பிரபாகரனுக்கு அமைச்சர் தொண்டமான் எழுதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார். மூன்று பக்கங்கள் கொண்ட இக்கடிதத்தில் அமைச்சர் தொண்டமான் தான் இனப்பிரச்சினைத் தீர்விற்காக மேற்கொண்ட முயற்சிகள் குறித்தும், பாராளுமன்றத் தெரிவுக் குழுவிலிருந்து தாம் விலகியது பற்றியும் விரிவாகக் குறிப்பிட்டுள்ளார்.

தெரிவுக் குழுவின் தோல்வி பற்றி இக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ள அமைச்சர் தொண்டமான் "தெரிவுக் குழுவின் தோல்வியுடன் தமிழரின் சரித்திரம் முடிந்து விடவில்லை. உலகம் வியக்கும் சரித்திரத்தை தமிழர்கள் படைத்தே தீருவார்கள் என்பதே எனது அசைக்க முடியாத நம்பிக்கை. நல்லதோர் வருங்காலத்தை எதிர்நோக்கிக் கொண்டு இக்கடிதத்தைஅனுப்புகின்றேன்" எனவும் இறுதியில் தெரிவித்துள்ளார்.

தலைவர் பிரபாகரனுக்கு அமைச்சர் தொண்டமான் எழுதிய கடிதத்தின் முழு விபரமும் மூன்றாம் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.



## வவுனியா மேற்குப் பகுதியில் புதிய காவலரண்கள்

வவுனியாவின் மேற்குப் பகுதியில் பம்பைமடு, மடுக்காரம்பளை, கணேசபுரம், சமயபுரம் பகுதிகளில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் அப்பகுதிகளில் புதிய காவலரண்களை அமைத்து வருவதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. கடந்த ஞாயிறன்று காலை வவுனியாவில் 3000 படைகளுடன் கவசவாகனங்கள், கனரகஆயுதங்களுடனும் இப் பகுதியில் இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டமை தெரிந்ததே.

## காங்கேசன் ஊடாக உணவு அடுத்தவாரம் முதல் வரும்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டுக்கு காங்கேசன்துறை துறைமுகத்தின் ஊடாக அத்தியாவசிய உணவுபொருள் விநியோகத்தை அடுத்த வாரமளவில் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மேற்படி துறைமுகத்தின் ஊடாக குடாநாட்டுக்கு அத்தியாவசிய உணவுப் பொருள்களை எடுத்துவருவதுதொடர்பான நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துவதற்கு ஏற்கனவே முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவ்விடயம் தொடர்பான மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகச் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் அதிகாரிகள் குழு ஒன்று நேற்றுப் பலாலிக்கு விஜயம் செய்துள்ளது. இவ்வதிகாரிகள் பலாலியில் இராணுவ பிரிகேடியர் உட்பட பல இராணுவ அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவார்கள்.

காங்கேசன் துறை துறைமுகத்தில் களஞ்சியப் படுத்தப்பட்டிருக்கும் உணவுப்பொருள் (10-ம் பக்கம் பார்க்க)

## உணவு பொருள்களுடன் குமண வந்தடைந்தது

[வடமராட்சி]

'குமண' கப்பல் நேற்று பகல் 11-20 மணியளவில் பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைந்தது.

இக்கப்பலில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு அரிசி 1000 மெட்றிக் தொன், மா 300 மெட்றிக் தொன், சீனி 100 மெட்றிக் தொன். மைசூர் பருப்பு 20 மெட்றிக் தொன், சன்லைட் சவர்க்காரம் 05 மெட்றிக் தொன் லக்ஸ்பிறே 12 மெட்றிக் தொன், சர்க்கரை 50மெட்றிக் தொன், ரவை 05 மெட்றிக் தொன் உணவுப் பொருள்களும், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திற்கு டீசல் ஓயில், மருந்துவகைகள், போருட் நிறுவனத்திற்கு மீன் [10 ஆம் பக்கம் பார்க்க]

## ஒற்றுமை குறையும்போது சுதந்திரத்தை இழக்கிறோம் -பிரேமதாசா

[கொழும்பு]

எமது மக்கள் மத்தியில் ஒற்றுமை குறைகிற சந்தர்ப்பங்களில் எல்லாம் நாம் எமது சுதந்திரத்தை இழந்துவிடுகிறோம். அண்மைக் காலத்தில் ஒற்றுமை இன்மை என்ற விஷக்கிருமி எமது நாட்டு மக்களை எவ்வாறு தாக்கியது என்பதை நாம் அனுபவ ரீதியாக அறிந்து கொண்டோம்' இவ்வாறு சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா சிறிலங்காவின் 45 ஆவது சுதந்திரதின கொண்டாட்டங்களில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில் 'வடக்கு கிழக்கு பிரச்சினைக்கு விரைவான தீர்வொன்று காணப்படுவதை மக்கள் அக்கறையோடு எதிர்பார்த்திருக்கிறார்கள். அதற்கு தீர்வு காண்பதில் தாமதம் ஏற்படுவதால் பல உயிர்கள் அழிந்து வருகின்றன' என தெரிவித்தார்.

## பொருள்கள் அனுமதியில் கூட்டுப்படை கெடுபிடி

[யாழ்ப்பாணம்]

கூட்டுப்படை தலைமை அலுவலக அதிகாரிகள் மாற்றம் வடபகுதிக்கு வரும் பொருள்களை அனுப்பிவைப்பதில் பெரும் தடங்கலை ஏற்படுத்தியுள்ளது.

கூட்டுப்படை அதிகாரியாக இதுவரை கடமையாற்றிய கேணல் இராஜரட்ண பதவி மாற்றம் பெற்றதை அடுத்து அவரால் வடபகுதிக்கு அனுமதிக்கப்பட்ட பல பொருள்களுக்கு புதிதாக நியமனம் பெற்ற அதிகாரி கேணல் மிகுந்துகுல சூரியவினால் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அனுமதி மறுக்கப்பட்ட பொருள்களுள் வடபகுதியில் இராணுவ நடவடிக்கையினால் பாதிக்கப்பட்ட ( 10ஆம் பக்கம் பார்க்க )

## பொருளாதாரம் சீரடைய யுத்தம் நிறுத்தப்பட வேண்டும்

### பி. பி. சி. விமர்சனம்

(கொழும்பு)

"பொருளாதார முயற்சிகளுக்காக இலங்கையில் முதலீடு செய்வதற்கு வெளிநாட்டு முதலீட்டாளர்கள் விரும்புகின்றபோதிலும் இங்குதொடர்ச்சியாக நடைபெறும் யுத்தத்தினால் அவர்கள் பின்வாங்குகிறார்கள்" இவ்வாறு இலங்கையின் சுதந்திர தினத்தையொட்டி பி.பி.சி தனது செய்திஆய்வுரைக்கண்ணோட்டத்தில் தெரிவித்தது.

அதில் மேலும், விடுதலைப் புலிகள் தமக்கு வேண்டிய போதெல்லாம் கொழும்பு நகரில் குண்டுத் தாக்குதலை நடாத்துகின்றனர். இதன் விளைவுகள் உறுதியற்ற ஒரு நிலையைத் தோற்றுவித்துள்ளது. இலங்கையை விட தாய்லாந்து, மலேசியா போன்ற நாடுகள் பாதுகாப்பானவை என்று அவர்களுக்குத்தோன்றுகின்றது. இதனால் இலங்கையின்பொருளாதாரம் சீரடைய வேண்டுமானால் போருக்கு முடிவு காணவேண்டும். இதற்கு அரசியல்தீர்வு காணப்பட வேண்டும். இத்தீர்வை அரசின் ஆதரவாளர்கள் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள் என்றும்

சுதந்திரத்துக்குப் பின்னர் ( 10ஆம் பக்கம் பார்க்க )

## உளவாளிகள்!!!

## அவதானமாக இருக்கவும்..

காட்டிக்கொடுப்பதற்காய் காத்திருப்பவர்

வேறுகாரணமும் சொல்லலாம்

# வரி விளம்பரம்

## இசை வகுப்புகள்

வாய்ப்பாட்டு வயலின், வீணை ஆகிய வகுப்புகள் 6-2 93 (சனி தைப்பூசம் அன்று காலை 9.00 மணிக்கு ஆரம்பிக்கவுள்ளன. தொடர்பு: யாழோசை, 61, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (4207)

## அழகிய சாயிபாபா ஸ்ரிக்கர் இனாம்

எம்மிடம் றேடியோ, மணிக்கூடு திருத்தும் வாடிக்கையாளர்கட்கு மூன்று(3) அழகிய சாயிபாபா ஸ்ரிக்கர் இனாமாக வழங்கப்படும். டிக்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ் 284, ஸ்ரான்லி வீதி. (வானவில் கூல்பார் அருகாமை) யாழ்ப்பாணம். கிளை; இலங்கை வங்கி அருகாமை, சாவகச்சேரி. (எலெக்ரோனிக் ஒட்டோமற்றிக் கடிகாரங்கள் திருத்துவதில் கைதேர்ந்தவர்கள்.) (சி-5918)

## பாலர் ஆசிரியர் பயிற்சி

மேற்படி பயிற்சி 6-2-93 இல் ஆரம்பமாகிறது. போயா தினங்களில் நடைபெறும். O/L சித்தியடைந்த மாணவிகள் விண்ணப்பிக்கலாம், விபரங்கட்கு. பாலர் கல்விக்கழகம். 49/5 யாழ்வீதி, யாழ்ப்பாணம் (4209)

## "நீமியா உரம்"

விவசாயிகளின் உற்ற நண்பன். விளைச்சலைப்பெருக்கும் பசளைக்கு கேடுவிளைவிக்கும் பூச்சி, புழுக்களை விரட்டும் நாசினி. 20 கிலோ பொதிகளிலும் கிடைக்கிறது. அண்ணா கோப்பிக்கடைகளிலும் விற்பனையாகின்றது -மில்க்வைற் (சி-5922)

## குரு, செவ்வாய் வக்கிர சஞ்சாரம்

ரூ 8/- எங்கும் விற்பனையாகிறது. யுரேனஸ், நெடரியூன், புளூட்டோ, வக்கிரச்செவ்வாய் நேரகோட்டிலேயே சஞ்சரிக்கின்றன. (எல்லா ராசிகளின் பலன்களுக்கும் புத்தகம்) தயாளன் விவசாய மருந்தகம் பலாலி றோட் கோண்டாவில். (4220)

## பரீட்சை(ஆண்டு 4,5)

வருடா வருடம் சிறந்த பெறுபேற்றைப் பெற்றுத்தரும் நிறுவனத்தால் நடாத்தப்படும் புலமைப்பரிசில் மாதிரிப்பரீட்சை ஆண்டு 4, ஆண்டு 5, வகுப்புகளுக்கு 07 02 93 ஞாயிறு மு.ப 8.00 மு.ப 11.00 நேரங்களில் நடைபெறும். பதிவு செய்யவும் புதிய கலை நிலையம், 219 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (4221)

## தையற் பயிற்சி வகுப்புகள்

அனுபவம் வாய்ந்த டிப்புளோமாத் தகைமை உடைய ஆசிரியையால் விஞ்ஞான முறையிலான வெட்டுக்களும் சித்திர வேலைப்பாடுகளும் தையல் வகுப்புகளில் பயிற்றப்படும். தொடர்பு கொள்ளவும்: 414 கோவில் வீதி, நல்லூர் வடக்கு. [4210]

## கறுப்புப்போத்தல்

அரைப் போத்தல் திரவம் கொள்ளக் கூடியது விற்பனைக்குண்டு. மில்க்வைற். [சி 5942]

## சோதிடம்

உங்கள் பிள்ளைகளின் எதிர்காலம் பற்றி சிந்திக்கும் நேரத்தில் ஜாதகம் எழுத பெயர் வைக்க திருமணப்பொருத்தம் பார்க்க—வேலணை சோதிடர் V A சிவராசா 152 B அரசடி றோட் கந்தர்மடம் — யாழ்ப்பாணம். [4224]

# நினைவு கூருகின்றோம்..

## 1993-2-5

1986 ஆம் ஆண்டு இதே தினத்தில் யாழ் பருத்தித்துறை முகாமிலிருந்து சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலிற் கொல்லப்பட்ட - 4 பெண்கள் உட்பட 8 தமிழர்கள்.

1987 ஆம் ஆண்டு சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய -

★ துரையப்பா குமாரசாமி [ஆயித்தியமலை - மட்டு]

★ நாகமணி கந்தசாமி (மகிழவெட்டுவான் - மட்டு.)

1988 ஆம் ஆண்டு மட்டு - சேனைக்குடியிருப்புப் பகுதியில் இந்தியப் படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

துரை [முத்தையா விவேராசா - நற்பிட்டிமுனை - அம்பாறை]

1989 ஆம் ஆண்டு யாழ் - அச்சுவேலிப் பகுதியில் இனங்காணப்படாத நிலையில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் எமைப் பிரிந்த -

★ பேபி [தேவராணி முருகதாஸ் - மயிலணி, சுன்னாகம் - யாழ்]

யாழ் - வட்டுக்கோட்டை, சங்கரத்தைப் பகுதியில் தேச விரோதக் குழுவினரால் கொலை செய்யப்பட்ட - நாட்டுப்பற்றாளரான -

கந்தசாமி சண்முகசுந்தரம் [நவாலி, மானிப்பாய் - யாழ்]

மற்றும் 4 தமிழர்கள்.

1991 ஆம் ஆண்டு யாழ் - தச்சன்காட்டுச் சந்தி சிறிலங்கா இராணுவ மினிமுகாம் தகர்ப்பு முயற்சியின் போது வீரச்சாவெய்திய -

சிவசோதி [கணபதிப்பிள்ளை ரவீந்திரன் -1-ம் குறுக்கு வீதி. தம்பிலுவில் - அம்பாறை]

லெப். மணிமாறன் [சின்னத்தம்பி பவளேந்திர ராசா - பதுளைவீதி, கரடியனாறு : மட்டு]

எட்வேட் [மயில்வாகனம் தயாபரன் - மண்முடித்தீவு, கொக்கட்டிச்சோலை - மட்டு.]

தயாநிதி [கணபதிப்பிள்ளை கந்தசாமி . வாகனேரி, மருதங்குளம் - மட்டு]

கோபு [கணபதிப்பிள்ளை சதாசிவம் - முதலைக்குடா, கொக்கட்டிச்சோலை - மட்டு]

நந்தன் [மார்க்கண்டு அழகவேல் -வேப்பவெட்டுவான், இலுப்பையடிச்சேனை - மட்டு.]

கரரூபன் [தயானந்தன ரூபானந்தன் - ஊத்துச்சேனை, வடமுனை - மட்டு.]

வாகீசன் (வாலிப்போடி கந்தசாமி - முனைக்காடு, கொக்கட்டிச்சோலை - மட்டு.)

ஐங்கரன் (பாலசிங்கம் விஜயரட்ணம் - துறைநீலாவணை - மட்டு)

ஐங்கரன் (துரையப்பா உதயன் -பக்கியெல்ல, மொறக்கொட்டாஞ்சேனை - மட்டு.)

கப்டன் கேதீஸ் (பாக்கியராசா றொபேட் நிக்சன்- 443, பாரதிபுரம், திருமலை)

கப்டன் தீபன் (சிவலிங்கம் ஜெயசீலன் - ஆலஸ் தோட்டம் - சாம்பல்தீவு - திருமலை)

லெப். யேனாட் [அரவிந்தராசா நிர்மலன் - செல்வநாயகபுரம் - திருமலை]

றோஸ்மன் (தேவராசா ரவீந்திரராசா - நிலாவெளி - திருமலை)

கப்டன் திலக் (ரட்ணசபாபதி மகேந்திரராசா - 7-ம் வட்டாரம், புதுக்குடியிருப்பு - மணலாறு)

சுதாகர் (வெலிச்சோர் றொபேட் கெனடி - இலுப்பைக்கடவை - மன்னார்)

2-ம் லெப். நகுலேஸ் [குமாரசிங்கம் சத்தியசீலன்- செக்கடிப்புலவு - வவுனியா]

நந்தன் [நல்லதம்பி கோபாலகிருஷ்ணன் - 47/61, இயக்கச்சிச் சந்தி, பளை - கிளிநொச்சி]

கண்ணன் [கந்தையா பாலகிருஷ்ணன் - பாபு வீதி, இத்தாவில், பளை - கிளிநொச்சி]

விநோதன் [வேலுப்பிள்ளை சுகுமார் - இயக்கச்சிச் சந்தி, பளை - கிளிநொச்சி]

மேஜர் சிறீ [கதிர்காமத்தம்பி ராஜசிறீ - கைவயல், சாவகச்சேரி - யாழ்]

மேஜர் சலீம் [அல்போன்ஸ் ஜோன் பிறிஸ்ரன்-16, முதலாம் குறுக்குத்தெரு, பஷையூர் - யாழ்]

கப்டன் அக்பர் [மாணிக்கம் யோகேஸ்வரன் - கச்சாய் தெற்கு, கொடிகாமம் - யாழ்.]

கப்டன் அஜித்தன் [சோழராசா ஜெகதீஸ்வரன்- தாவளை, இயற்றாலை, வரணி, கொடிகாமம் - யாழ்.]

லெப். ஜேம்ஸ் [கந்தையா ஜெபக்குமார் - பெரியதம்பிரான் கோவிலடி, அராலி தெற்கு, வட்டுக்கோட்டை - யாழ்]

லெப். அசோக் [முருகன் இராசகுமார் - இடைக்குறிச்சி, வரணி, கொடிகாமம் - யாழ்]

லெப். சுதன் [சின்னப்பு யூட்ஜெபசீலன் - மிருசுவில், கொடிகாமம் - யாழ்]

2-ம் லெப். சலீம் [கதிரவேலு பூபாலசிங்கம் - மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி-யாழ்]

2-ம் லெப். இலங்கேஸ் [மாசிலாமணி சிறீதரன்- சிறீதரன் வீதி, மீசாலை தெற்கு, சாவகச்சேரி - யாழ்]

அருள் [பொன்னையா விஜயசேகரன் - நாவற்குழிச் சந்தி, கைதடி - யாழ்.]

தமிழ்மணி [இரத்தினம் நிரஞ்சன் - அப்பர் வீதி, கோண்டாவில் வடக்கு - யாழ்]

பாபு [கணபதிப்பிள்ளை சாந்தராஜன் - சோரன்பற்று, வடமராட்சி கிழக்கு - யாழ்]

லிங்கவேந்தன் (அருளப்பு ஜெனிசியஸ் - 22, புதிய பூங்கா வீதி, குருநகர் - யாழ்.)

சதான் (ஆறுமுகம் இராஜேந்திரம் - இயற்றாலை, வரணி, கொடிகாமம் - யாழ்.)

யோகர் (வாரித்தம்பி சசிக்குமார் - கைதடி மேற்கு. சாவகச்சேரி - யாழ் )

1992 ஆம் ஆண்டு மட்டு - அலியார் றோட்டுக்குச் சென்று கொண்டிருக்கையில், பாவற்கொடிச்சேனைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

வதனலிங்கம்-சதானந்தர் (குலோகன் சிவகுமார் - கல்முனை - அம்பாறை

செல்வம் (செல்வராஜா சந்திரகுமார் - நாவிதன்வெளி, கல்முனை - அம்பாறை)

இதே மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட ஏறாவூர், தளவாயைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்-

ஆகியோரை இந்நாளில்

நினைவு கூருகின்றோம்

★ இக்குறிப்பிடப்பட்டுள்ள மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவர்களாவர்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி-5935)

# சமய அறிவுப்போட்டி முடிவுகள்

அளவெட்டி தெற்கு (நாகேஸ்வரம்) ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானத்தில் 1992 ஆம் ஆண்டு ஆவணி மஹோற்சவ தினங்களில் நடைபெற்ற "சொற்பெ ழிவு நுகர்வு" சமய அறிவுப்போட்டியில் பரிசு பெறுவோர்:

### கீழ்ப்பிரிவு I

1. செந்தில்நாதன் சிவதீபா, அளவெட்டி தெற்கு,
2. குணசேகரம் துவாரகன், அளவெட்டி தெற்கு,
3. அருமைத்துரை சாந்தரூபன், சண்டிலிப்பாய் வடக்கு

### கீழ்ப்பிரிவு II

1. மாணிக்கவாசகர் வித்தியாரூபி, அளவெட்டி தெற்கு,
2. முத்துலிங்கம் மதிமாறன், அம்பனை
3. சிவலிங்கம் சிவப்பிரியா, இணுவில்

### மேற்பிரிவு I

1. மகாலிங்கசிவம் லதாங்கி, அளவெட்டி தெற்கு,
2. தெய்வநாயகம் கயலினி அளவெட்டி தெற்கு,
3. பாலசிங்கம் கலைச்செல்வி, அளவெட்டி தெற்கு.

### மேற்பிரிவு II

1. கேசவநாதன் கேசினி, அளவெட்டி தெற்கு,
2. துரைரட்ணம் கலையரசி, அளவெட்டி தெற்கு,
3. தியாகராசா சுதாநிதி, சுழிபுரம்

மேலும் 42 பேர்கள் சான்றிதழ் பெறுவர். நாளை (6 2 93) பகல் 12 00 மணிக்கு தேவஸ்தானத்தில் பரிசில்கள் வழங்கப்படும்.

அருட்கவி சி. விநாசித்தம்பி
தேவஸ்தான பரிபாலகர்

(சி-5936)

# ஈராண்டு நினைவஞ்சலி



## கப்டன் அக்பர்

(மாணிக்கம் யோகேஸ்வரன்-குஞ்சன்)

| பாசத்தின் மடியில் | பாசறை அடியில் |
|---|---|
| 2?-?8-1968 | 05-02-1991 |

ஆண்டுகள் இரண்டு அல்ல அறுபது ஆனாலென்ன
புன்னகை தாண்டவம் புரிந்து மண்ணில்
பொலிவுடன் திகழ்ந்த தோற்றம்
ஆண்டிடும் நெஞ்சில் என்றும் அழிவது அதற்குமுண்டோ?

பெற்றோர்,
சகோதர குடும்பத்தினர்

கெற்பெலி
மிருசுவில். (3375)

# தலைவர் பிரபாகரனுக்கு தொண்டா எழுதிய கடிதம்

சமாதான முயற்சிகளை மேற்கொண்டு தமிழரின் விடிவுக்கு வேண்டிய தீர்வொன்றை உருவாக்கும் நோக்குடன் கடந்த வருடம் வைகாசி மாதம் முதலாக இலங்கை தொழிலாளர்காங்கிரஸ் தீவிர முயற்சி எடுத்து வந்தது. இதற்கு வேண்டிய சிந்தனைகளை எனது 27-8-91 திகதியிட்ட கடிதத்துடன் உங்களுக்கு அனுப்பி வைத்தேன். அதன் பின்னரும் உங்கள் இயக்கத்துக்கு அனுப்ப வேண்டியவற்றை அனுப்பி உள்ளேன்.

கடந்த ஆண்டு ஐப்பசி மாதம் முதல் பாராளுமன்றத் தெரிவுக்குழு செயல்படத் தொடங்கியது. இலங்கைத் தொழிலாளர்காங்கிரசின்முழு அளவிலான யோசனைகளை மார்கழி மாதம் 10 ஆம் திகதி நான் அக்குழுவுக்குச் சமர்ப்பித்து, உங்களுக்கும் அனுப்பியுள்ளேன் உங்கள் சிந்தனைகளைஅறிந்துஎமது முயற்சியில் வெற்றி காண்பதற்கு ஒரு நேரடிச் சந்திப்பையும் விரும்பினேன். ஆனால் இவை இடம்பெறும் சூழ்நிலை உருவாகவில்லை.

உங்கள் இயக்கத்தின் சிந்தனைகளும், சில எனக்குக் கிடைத்தன, அத்தோடு எனது திட்டத்தைப் பற்றிய உங்கள் பரிசீலனைகளும் சாதகமான விமர்சனங்களும் என்னைச் சேர்ந்தன எனது திட்டத்தை ஜனாதிபதிக்கும் எல்லா அரசியல் தலைவர்களுக்கும் அனுப்பி வைத்தேன். அத்தோடு சிங்கள, முஸ்லிம் அரசியல் தலைவர்களோடும் கலந்துரையாடினேன். எனது சமாதான முயற்சியும் தீர்வுத் திட்டமும் ஒரு அரசியல் புயலை தென்னிலங்கையில் உருவாக்கியது. இப்பொழுது யாவரும் அறிந்ததே.

இவ்வாண்டு தை மாதம் தொடக்கம், பாராளுமன்றத் தெரிவுக்குழுவுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள் ஓரளவு ஆராயப்பட்டன. ஆனால், தமிழரின் பிரச்சினைகளைத் தீர்க்கக் கூடிய அடிப்படை விசயங்கள் முழுமையாக விவாதிக்கப்பட்டவை என்று சொல்வதற்கில்லை. இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தாம் முன் வைத்த திட்டத்தை தடுமாற்றம் எதுவுமின்றி ஆணித்தரமாக எடுத்துரைத்தது எனினும் அவை ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

இவ்வருடம் ஆனிமாதத்தில் பாராளுமன்றத் தெரிவுக்குழு ஒரு கருத்துப் பத்திரத்தைக் கையளித்தது. தமிழரின் அபிலாசைகளை நிறைவேற்றும் வழிவகைகள் எதுவுமே இப்பத்திரத்தில் இடம்பெறவில்லை. இதனை நான் வன்மையாகக் கண்டித்து இலங்கை தொழிலாளர் காங்கிரசின் உறுதியான நிலைப்பாட்டை தெரிவுக்குழுத் தலைவருக்கு அனுப்பி வைத்தேன். தமிழர் ஏற்றுக்கொள்ளக் கூடிய அரசியல் தீர்வுக்கு அடிப்படைத் தத்துவங்களில், ஏகோபித்த கருத்து ஒருமைப்பாடு இல்லாதசூழ்நிலையில், சமாதான முயற்சியைக் கைவிடலாம் என்று சுட்டிக் காட்டினேன்.

இதன்பின்னர் இடம்பெற்ற தெரிவுக்குழுக் கூட்டங்களின் இறுதியில், ஐப்பசி மாதத்தில் மற்றுமொரு கருத்துப் பத்திரம் வழங்கப்பட்டது உருப்படியான சிந்தனைகள் எதுவுமே இல்லாத இப்பத்திரத்தை நான் முழுமையாக நிராகரித்தேன். தமிழருக்குச் சுயாட்சி வழங்காத ஒரு தீர்வு ஒருபொழுதும் சமாதான நிலைமையை உருவாக்க இயலாது என்பதை சுட்டிக் காட்டினேன். மேலும், இக்கடமையில் தவறும் செயற்குழுவில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தொடர்ந்தும் இடம் பெறுவதில் கருத்தில்லை எனவும் எச்சரித்தேன்.

கார்த்திகை மாதம் திரு. சிறினிவாசன் தெரிவுக்குழுவுக்குச் சில யோசனைகளை முன் வைத்தார். இவற்றில் எமக்குச் சாதகமான ஒரு கருத்தையுமே என்னால்காண முடியவில்லை. ஐந்து வருட காலமாக நிலைபெற்றிருந்த வடகிழக்கு இணைப்பை துண்டிக்க எடுத்த சூழ்ச்சிக்குச் சமஷ்டி என்ற போர்வை கொடுக்கப்பட்டது அரசியல் சாதுரியமற்ற இக்கருத்துகளுக்கு தென்னிலங்கையில்பெரும் வரவேற்பிருந்தது. ஆனால் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் அவற்றை முற்றாக ஒதுக்கித் தள்ளியது.

அரசியல் தெளிவும், உறுதியும் இல்லாதஇச்சூழ்நிலையில் தெரிவுக்குழு தனது கடமைகளை மறந்து, தடுமாறித் தத்தளித்தது. இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் முன்வைத்த முழுமையான யோசனைகள் தகுந்த முறையில்ஆராயப்படவில்லை பரிசீலிக்கும் சிந்தனையையும் எம்மால் அவதானிக்க முடியவில்லை. எனினும், ஒருவருஷ காலமாக ஒரு உருப்படியான தீர்வை உருவாக்கும் சிந்தனையோடு இலங்கை தொழிலாளர்காங்கிரஸ் முழு முயர்சி எடுத்தது. எமது வைராக்கியமான நிலைப்பாடு வெற்றி அளிக்கவில்லை. இந்தப் பின்னணியில், பாராளுமன்றத்தெரிவுக்குழுவின் பணிகளிலிருந்து இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் விலகியுள்ளது.

இலங்கை தொழிலாளர் காங்கிரசின் நிலைப்பாட்டை விளக்கி தெரிவுக்குழுவின் தலைவர் திரு. மங்கள முனசிங்க அவர்களுக்கு மார்கழி 21 ஆம் திகதி அனுப்பிய கடிதத்தின் பிரதியை இத்துடன் அனுப்புகின்றேன். அத்தோடு, முன்னர் அவருக்கு அனுப்பிய மூன்று கடிதங்களின் பிரதிகளையும் அனுப்புகின்றேன். தெரிவுக் குழுவில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் அங்கம் வகிக்கும் வேளையில் நான் இவற்றைப் பரிமாற இயலவில்லை.

தெரிவுக் குழுவின் தோல்வியுடன் தமிழரின் சரித்திரம் முடிந்துவிடவில்லை. உலகம் வியக்கும் சரித்திரத்தை தமிழர்கள் படைத்தே தீர்வார்கள்என்பதே எனது அசையாத நம்பிக்கை. நல்லதோர் வருங் காலத்தை எதிர்நோக்கிக் கொண்டு இக்கடிதத்தை அனுப்புகின்றேன்.

தலைவர் பிரபாகரனுக்கு 23 – 12 – 1992 இல் திகதியிட்டு அமைச்சர் தொண்டமான் எழுதிய கடிதம் முழுமையாக இங்கே கொடுக்கப்பட்டுள்ளது.

# கிழக்கில் துன்பத்தின் மத்தியிலும் மனோதிடத்துடன் வாழும் மக்கள்

## மட்டு - அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதியின் விசேட பேட்டி

"அம்பாறை, மட்டக்களப்புமாவட்டங்களில்தமிழ்க் கிராமங்கள் மீது இராணுவம் தாக்குதல் நடத்துவதைத் தொடர்ந்து மக்கள் இடம் பெயர்ந்து முகாம்களில் வாழ்கின்றார்கள். இந்தத் தாக்குதல்களுக்குப் பெரும்பாலும் எல்லைப்புறச் கிராமங்களே இலக்காகின்றன. இராணுவம் பொலிஸ் மற்றும் முஸ்லிம் காடையர்களின் வன்முறைகள் அன்றாட வழக்கமாகிவிட்டன. இன்றல்ல நேற்றல்ல பல காலங்களாகவே தமிழ் மக்கள் மீது வன் முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன. இந்த அநியாயச் செயலுக்கு அப்பாவிப் பொது மக்களே பலியாகிறார்கள். சர்வதேச செஞ்சிலுவைக்குழு கெயர், மற்றும் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் ஆகிய எல்லாமே இங்கு செயற்படுகின்றன. ஆனால், இராணுவத்தின் கெடுபிடிக்கும் அச்சுறுத்தலுக்கும் மத்தியில் மனித நேய ஸ்தாபனங்களால் அர்ப்பணிப்புடன்செயல்பட முடியவில்லை."

மட்டக்களப்பு மாவட்ட விசேட தளபதி கருணாவை ஈழநாதம் செய்தியாளர் பேட்டி கண்டார். அப்போது அவர் இவ்வாறு கூறினார்

கிழக்கில் இராணுவத்தின் அனர்த்தங்களால் பாதிப்புக்குள்ளாகி இருக்கும் சிற்றூர்களும், கிராமங்களும் தமிழர்களின் பூர்வீக ஊர்கள். இந்த ஊர்களில் வாழும் மக்களின் ஜீவனோபாயத் தொழில் வேளாண்மை ஊர் முழுக்க விவசாயம் செய்யப்பட்ட பூமியில் இப்பொழுது பத்து வீதம் தான் விவசாயம் செய்யப்படுகிறது. நெற்பயிர்கள் அறுவடைக்குத் தயாராயிருக்கும் காலங்களில் இராணுவம்ஊடுருவி அறுவடையைக் குழப்புகிறது. இம் முறையும் நெல் வயல்கள் பயன் கொடுக்கத் தொடங்கியிருக்கும் காலத்தில் இராணுவம் moon Light Operation என்ற இராணுவ நடவடிக்கையைத் தொடங்கியிருக்கிறது. இந்த இராணுவ நடவடிக்கை விவசாயக் கிராமமான படுவான் கரையில் முடுக்கி விடப்பட்டுள்ளது. நெற்கதிர்கள் தலை சாய்த்து நிற்கும் இந்த நேரத்தில் தமிழ் கிராமங்களின் பொருளாதாரத்தை கெடுத்துவிடும் நோக்கத்துடன் இராணுவ நடவடிக்கைதிட்டமிட்டு நடத்தப்படுகிறது என்றார் கருணா.

### அரசின் நடவடிக்கைகள்

அவசரமாக - உடனடியாக பிரதேச சபைகளை நிறுவ அரசு பிரயத்தனம் செய்து வருகிறது. ஆடைத் தொழிற்சாலையை நிறுவுவதற்கு முயற்சி மேற்கொள்ளப்படுகிறதாம். ஜனாதிபதியின் நடமாடும் சேவை இனி மட்டக்களப்பில் தான் என்று சொல்லப்படுகிறது. குழம்பிய குட்டையில் மீன் பிடிக்கவே இந்த நடவடிக்கைகள் எல்லாம். இவையெல்லாம் காலம் கடந்த நடவடிக்கைகள் இந்த நடவடிக்கைகளினால் தமிழ் மக்கள் மனம்குழம்பி விடுவார்கள் என்று அரசு எதிர்பார்க்கிறது. இதுக்கெல்லாம் மக்கள் ஆதரவு இல்லை; வெற்றி தராது.

### கல்வி நிலையங்கள்

ஏலவே அம்பாறையும், மட்டக்களப்பும் கல்வியில் பின்தங்கிய மாவட்டங்கள் இப்பொழுது கல்வியில் பாரிய பின்னடைவுகள் ஏற்பட்டுள்ளன. பிள்ளைகள் பள்ளிக் கூடம் செல்வதற்கு வாகனப் போக்கு வரத்துக் குறைவு மாணவர்கள் தலை நிமிர்ந்து சுதந்திரமாக நடமாட முடியாத நிலை. முன்பு நிரம்பி வழிந்த சிவானந்தாக் கல்லூரி, புனித மைக்கல்ஸ், இந்துக் கல்லூரி, மத்திய கல்லூரிகளில் அக்கம் பக்கத்திலுள்ள மாணவர்கள் தான் கல்விபயில்கிறார்கள். வகுப்பறைகள் காற்றுவாங்குகின்றன. பல்கலைக்கழகமும்பெயருக்காகஅல்லது பெயரளவில். செயற்படுகின்றது. சுதந்திரமான நடமாட்டம்இராணுவத்தினரால் மட்டுப்படுத்தப் பட்டிருப்பதால் பல்கலைக்கழக ஆசிரியர்களும், மாணவர்களும் பாடத்தோடு இணைந்த புற வேலைகளில் ஈடுபடுவதில்லை



கருணா

### சுகாதாரமும் மருத்துவமும்

வெளிநாட்டு டாக்டர்கள் மட்டக்களப்பில் பணிபுரிகிறார்கள் என்று மருத்துவத்துக்கும் ஒரு அரசியல் சாயம் பூசப்பட்டு விட்டது. பாகிஸ்தான் டாக்டர்கள் மட்டக்களப்பு பெரிய ஆஸ்பத்திரியில் தான் வேலை பார்க்கிறார்கள். பாகிஸ்தான் டாக்டர்களின் சேவை கிராம மக்களுக்கு எட்டுவதில்லை. ஆதார வைத்தியசாலைகளில் பெயர்ப் பலகைகள் மாத்திரம்தான் தொங்கிக் கொண்டுள்ளன. சண்டையைக் காரணம்காட்டி வாகரை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள ஆஸ்பத்திரி மூடப்பட்டுள்ளது. இதனால் பத்துக்கும் மேற்பட்ட கிராம மக்கள் துன்பப்படுகிறார்கள். மருந்துத் தடையால் ஆஸ்பத்திரியில் மருந்துத்தட்டுப்பாடு. அரச அதிபர் இது குறித்து அதிக கவனம் எடுப்பதாக இல்லை. குழந்தைகளுக்கு ஊட்டச் சத்துள்ளஉணவு கிடைப்பதற்கான வாய்ப்புகள் குறைவு.

### நிதி நிலைமை

மக்கள் மத்தியில் பணப் புழக்கம் இல்லை. உணவுப் பொருள்கள் சிறிதளவு கிடைத்தாலும் அவற்றைக் கொள்வனவு செய்யமுடியாதநிலை மீன்பிடி தடை செய்யப்பட்டிருப்பதால் மீனவருக்குப்பண வருவாய் இல்லை. வாவியில் இறால் பிடிக்கலாம் என்றாலும் சந்தைப்படுத்தும் வசதிகள் இல்லை. மற்றும் கமக்காரர் நிலையும் இதேதான்.

[8ஆம் பக்கம் பார்க்க]

## சிறுகதை

# கள்ளர் கவனம்!

### ஈழமுத்து

சாத்திரியாரின் வீட்டுப் படலையை திறந்து கொண்டு சைக்கிளில் ஏறி மிதிக்கத் தொடங்கினான் தில்லை வாசல் வரை குலைத்துக் கொண்டு வந்து அவனை வழியனுப்பி வைத்தது சாத்திரியார் வீட்டு நாய்.

'நினைச்ச காரியம்' நிறைவேறாத கவலை அவன் முகத்தில் தெரிந்தது. அவனது துப்பறிவுக்கு கிடைத்த முதல் அடி இல்லை ... இல்லை ... சாத்திரியார் சொல்லிறதிலைதான் பிழையிருக்க வேணும்.

'வடக்காலை தான் அந்தப் பொருள் போயிருக்கவேணும்'' என்று சொன்னபோது அவனுக்கு ஒருபுறம் சிரிப்பாகக்கூட இருந்தது ஏனெனில் வீட்டு வாசலே கிழக்குப்பக்கமாகத்தான் இருக்கு சுத்திவர மதிலும் வேற இருக்கு எப்படி அந்தப் பொருள் வடக்காலை போயிருக்க முடியும்? சாத்திரியார் சொல்வதெல்லாம் உண்மையில்லை என்று அவனது துப்பறியும் மூளை கூறியது.

அந்த ஒழுங்கை வீதியில் பிரவேசிக்கும் ஏத்தத்தில் தன் பலத்தையெல்லாம் ஏககாலத்தில் சைக்கிளில் பிரயோகித்து ஏறிக்கொண்டான். குறுக்கே விடிகலைப்பொழுதில் வீதிக்கு 'சாம்பிராணி'புகை காட்டியது போல் கரும்புகையை கக்கியவாறே மினிவான் விரைந்து கொண்டிருந்தது. அதன் வாயில் பலர் தொங்கியபடியே பிரயாணஞ் செய்து கொண்டிருந்தனர்.

சந்தியில் நின்று வீதியில் செல்வோரை அவதானித்துக் கொண்டிருந்தான் தில்லை. அவன் சந்தேகப்படும்படியாக யாரையும் காணவில்லை இப்படி "ஜீன்சோடை திரிஞ்சால் சந்தேகப்படுவாங்கள் வீட்டை போய் சாரத்தை மாத்தி வருவோம்'யாரும் சந்தேகப்படாதவாறு சாதாரண உடையில் நடமாடுவது ஒரு துப்பறிவாளனுக்கு நிச்சயம் தெரிந்திருக்க வேண்டும் என எங்கோ நாவலில் படித்ததாக ஞாபகம். வீட்டை நோக்கி சைக்கிளில் விரைந்தான் தில்லை.

எதிரே இரு நண்பர்கள் கையைக்காட்டி ஏதோ சொல்லிக்கொண்டு போனார்கள். அவர்கள் என்ன சொல்லியிருப்பார்கள் என்று அவனுக்கு தெரியும். ''அவனுக்கென்ன கொண்ணர் வெளிநாட்டிலை இருந்து உழைச்சனுப்பிறார் அவன் இஞ்ச ஊர்சுத்திறான்'' எண்டுதான் சொல்லியிருப்பாங்கள் இது வழமைதானே "ஆனா இன்னும் கொஞ்ச நாளையிலை ஐயாவைப் பற்றி அவையளுக்கு நல்லா விளங்கும்"' மனதிற்குள் பெருமைப் படடுக்கொண்டான்.

அவனுடைய மனதில்ஏதோ திட்டமிருக்கவேணும். அது என்ன? அறிய ஆவலா? அப்படியாயின் சைக்கிளை கொஞ்சம் வேகமாக உழக்குங்கள் சற்று முன்னே செல்வோம்.

★

"எடேய் பத்துக் கள்ளச் சைக்கிளை காவல்துறை பிடிச்சிருக்காம்'' அம்மா பேப்பருடன் வந்தாள். சாரத்தை அவசர அவசரமாக இடுப்பில் செருகிக் கொண்டே பேப்பரை வேண்டி நடுப்பக்கத்தில் அந்தச்செய்தியை தேடினான்.

ஏன் அவனுக்கு இந்த அவசரம்? அவனுடைய சைக்கிளை பறிகொடுத்து விட்டானா? இல்லையே - அடபோ?... ஆமாம், பக்கத்து வீட்டில் முந்தநாள் தான் ஒரு சைக்கிள் களவு போயிருந்தது. அவன் எதிர்பார்த்திருந்த சந்தர்ப்பம் ஒன்று கிடைத்திருக்கிறது அவன் விரும்பி படிக்கும் துப்பறியும் நாவல்களின் கதாநாயகர்கள் போல் ஆவதற்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது.

''மரணச் சடங்கில் இறந்தவர் சைக்கிள் மாயமாய் மறைந்தது, சைக்கிள் திருட்டு, நாய்க்கு கத்திக்குத்து, வீரபாண்டிய கட்டப் பொம்மன் படம் பார்த்துக் கொண்டிருந்தவரின் சைக்கிளை எட்டப்பன் தட்டிச்சென்றான்'' என்ற பத்திரிகை செய்திகள் தொடர்ச்சியாக வந்தது அவனை உற்சாகமூட்டின

அவனது இந்தக் கன்னி முயற்சி மட்டும் வெற்றி பெற்றுவிட்டால், ஜேம்ஸ் பாண்ட்போல், மாயாவி போல், அவன் இரசிக்கும் சினிமாக் கதாநாயகர்கள் போல் அவனும் ஆகிவிடுவான் அதைவிட அன்று காவல் துறையில் சேரப்போனபோது வயதையும், சில அங்குலங்களையும் பற்றாக்குறையாகக் காட்டி. நிராகரித்தார்களே அவர்களுக்கும் ஒரு அதிர்ச்சியான ஆச்சரியமாக இருக்கும் அந்தக் கள்ளரை மட்டும் பிடித்துவிட்டால்.

''தான் கள்ளரை பிடிப்பது போலவும்.மாயாவியைப்போல் அவர்கள் தாடைகளை தன் முஷ்டியால் பதம் பார்ப்பது போலவும் கற்பனையில் மிதந்தவாறு தன் இளம் மீசையை தடவிக்கொண்டான் பேப்பரை அம்மாவிடம் கொடுத்துவிட்டு ''எணை உதிலை போட்டு வாறன்'' என்றவாறு சைக்கிளை அவசரமாக எடுத்தான் 'டேய் இப்ப கண்டபடி சைக்கிள் போகுது. கள்ளர் கவனம்! ... ...''பதிலேதும் கூறாமல் சிரித்துக் கொண்டே சைக்கிளை மிதித்தான். ''நான் அந்தக் கள்ளனையே பிடிக்கப் போறேன்,அம்மாஎன்னண்டா கள்ளர் கவனமாம் என்றவாறு தன் பயணத்தை தொடர்ந்தான்.

இனி சாத்திரியாரிட்டை போய் வேலையில்லை. ஒரு துப்பும் கிடைக்காது. எதுக்கும் காவல் துறைக்கு ஒருக்காப்போய் பார்க்க வேணும் சிலவேளை பக்கத்து வீட்டுச் சைக்கிலும் பிடிபட்டிருக்கும். ஆண்டவா அப்பிடியேதும் பிடிபட்டிருக்கக்கூடாது என்று நேர்ந்தவாறே காவல்துறை அலுவலகத்தை அடைந்தான்.

உள்ளே சென்றான். கீழே 'முறைப்பாடுகள்' பகுதியிலிருந்த (காவல்துறை நேர்முகப் பரீட்சையில் அவனை நிராகரித்த) பொலிசாரை முறைத்துவிட்டு பக்கத்திலிருந்தவரிடம் விசாரித்தான்.

அவன் குறிப்பிட்ட சைக்கில் இன்றும் பிடிபடவில்லையென்றும். இன்னொருஇடத்தில் திருட முயன்றவர்களே பிடிபட்டுள்ளார்கள் என்றும் அந்தப் பொலிசார் கூறினார் அவருக்கு நன்றி கூறிவிட்டு காவல் துறை அலுவலகத்திலிருந்துபுறப்பட்டான் தில்லை. அவன்ரகையாலேயே பிடிபடவெண்டு கள்ளர் காத்துக்கொண்டிருப்பது போல் அவனுக்குத் தோன்றியது அவன் பல ஆங்கில தமிழ் படங்கள் பார்த்திருக்கிறான்.

இந்தியாவிலிருந்துவரும் நூற்றுக்கணக்கான நாவல்களை வாசித்திருக்கிறான். பொதுவாக பெரும்பாலானவற்றில் கடைசிநேரத்தில் குற்றவாளி கைது செய்யப்படுவான் அல்லது கொல்லப்படுவான். இதில்வரும் கதாநாயகர்களின் துப்பறியும் ஆற்றலையும், வீரதீரச்செயல்களையும் எண்ணி வியந்திருக்கிறான். இன்றும் அதுபோல அவனது கன்னிமுயற்சியாக அந்தச் சைக்கிள் கள்வனைப் பிடித்துவிட்டால்? தான் ஒரு 007 ஆகிவிட்டதைப் போல் உணர்ந்தான். உடம்பு புத்துணர்ச்சியுடன் சுறுசுறுப்பாக இயங்கத் தொடங்கியது. தேவையில்லாமலே சுற்றும் முற்றும் பார்த்தான். நாயின் சிறு அசைவிலிருந்து சைக்கில் ரிக்சோவின் சிறு நகர்வு வரை உன்னிப்பாக அவதானித்தான்

இனி அடுத்த நடவடிக்கை என்ன? ''பிரபல துப்பறிவாளர்களின் குறிப்புக்கள்'' என்ற புத்தகத்தில் வாசித்த சில முக்கிய குறிப்புக்களை இரை மீட்டுக்கொண்டான். பொதுவாக திருடர்களை மடக்குவதற்கு இலகுவான சிலவழிகள் அதில் வரிசைக்கிரமமாக தரப்பட்டிருந்தன.

முதலாவதாக ''சம்பவம் நடந்த இடத்தை... [சைக்கில் திருடர்களும் வாசிக்கலாம் என்ற காரணத்தால் சிலவரிகள் தணிக்கை செய்யப்பட்டுள்ளன]

அவன் சைக்கிளைகொஞ்சம் வேகமாக்கினான் இனிச்சனத்தோடை கதைச்சு சில தகவல்களைப் பெறவேண்டும் என தீர்மானித்துக் கொண்டான். அடுத்த முகப்பில் திரும்பிய போது அடர்த்தியாக தாடி வளர்த்திருந்த ஒருத்தன் ,'அண்ணைநானும்ரெட்டே'' அச்சும்... அச்சும... நோயாளி போல் இருமினான்.

பாவமாக இருந்தது. சைக்கிளை பிறேக்கடித்து நிறுத்தினான்.அவனிடம் கதைத்தால் ஏதாவது தகவலறியலாம் என்று நினைத்தான். அந்த தாடிக்காரன் அருகில் வந்ததும்.

''எவட மண்ணை போறியள்'', உதிலை ஆசுபத்திரிக் குத்தான் தம்பி'' ''சரி ஏறுங்கோ'' 'இல்லையில்லை நீங்க இருங்கோ நான் உழக்கிறேன்'' என்றுவிட்டு இருமினான் அந்ததாடிக்காரன்.அவனது குரல் கரகரத்தது.

''பரவாயில்லை நானே உழக்கிறேன்'' என்று மரியாதைக்காக அவன் சொன்னாலும் இறுதியில் தாடிக்காரனே வென்றான்.

சிறிது நேரம் மௌனமாகவே சைக்கில் போய்க் கொண்டிருந்தது என்னெண்டு பேச்சைத் தொடங்குவோம் என்று தில்லை எண்ணிக் கொண்டான். இப்ப உதிலையெல்லே ஒரு சைக்கில் களவு போட்டுது அச்சும்... அச்சும்... ''தாடிக்காரனே பேச்சைத் தொடங்கினான். அதுவும் அவன் விசாரிக்க விரும்பிய விடயத்தையே தாடிக்காரன் பேசியது அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது.

களவு போன இடத்தை அவனிடம் கேட்டு மனதில் பதியவைத்துக் கொண்டான் ''பிறகு ஒருக்கா அந்த வீட்டுக்காரரை சந்தித்து விசாரிச்சுப் பார்க்கவேணும் கள்ளரைப் பற்றி ஏதாவது அடையாளங்கள் தெரிய வரலாம் என எண்ணிக்கொண்டான் தில்லை

''இப்ப கொஞ்சகாலமா களவு கூடிப்போச்சு ஒருதனைப்பிடிச்சு கொடுக்கிற தண்டனையில மற்றவங்கள் திருந்த வேணும்''

இப்பநாட்டிலை பஞ்சமும் தானே கூடிப்போச்சு முந்தின மாதிரி வேலைகளும் இல்லை அப்பகளவு கூடும் தானே என்றான் தாடிக்காரன்.

அவனது கருத்தை ஏற்றுக் கொள்ளாமல் ''இஞ்ச அந்த விறகுக் காரரைபபாருங்கோ அவங்களுக்கு கஷ்ரமில்லையே பஞ்சமில்லையே அவங்களும் உழைச்சு குடும்பம் நடத்திறாங்கள் தானே உது சும்மா ஒருசாட்டு. உதிலை ருசி கண்டவைசும்மா இருக்கினமே களவு இப்ப ஒரு தொழிலாவே போய்ச்சுது ''என்று பெரிய மனிதர்தோரணையில்சொல்லி முடித்தான் தில்லை.

தாடிக்காரன் ஒன்றும் பேசவில்லை. தனது கருத்தில் நியாயம் இருப்பதை அவன் உணர்ந்து கொண்டதாக தில்லை எண்ணினான்சைக்கில் சந்தியால் திரும்பி ஆசுபத்திரி வீதியில் பிரவேசித்தது.

கடையொன்றின் முன் ஏகப்பட்ட சைக்கில்கள் நின்றன பல பூட்டப்படாமலே. இப்படியான சைக்கில்கள் தானே களவு போகுது. உதிலதானே கடைக்கென்று விட்டு பூட்ட மறப்பவர்களின் சைக்கில்கள் தானே மாயமாக மறைகின்றன. அவர்களுக்காக பரிதாபப்பட்டுக் கொண்டான்.

தாடிக்காரன் திடீரெண்டு அந்தக் கடைக்கு முன்னால் சைக்கிலை நிப்பாட்டினான். ''எனண்ணை இறங்கப் போறியளே'' அவன் தன் பொக்கற்றிலிருந்து ஒரு ஐம்பது ரூபா தாளை எடுத்து ''தம்பி உந்தக் கடையிலை ஒரு பிஸ்கற் பெட்டியொன்று வாங்கித்தாறியளே'' என்றவாறு அவன் கையில் திணித்தான்.

அது ஒரு சாப்பாட்டுக்கடை உள்ளே சென்று பிஸ்கட்பெட்டிஒன்றை வாங்கிக் கொண்டு மிகுதிப் பணத்தையும் பற்றச் சீட்டையும் பெற்றுக்கொண்டு உள்ளே இருந்தவர்களை ஒரு ஜேம்ஸ் பாண்ட்பார்வை பார்த்துவிட்டு திரும்பிய போது...

அந்தத் தாடிக்காரனை காணவில்லை. சைக்கிளையுந்தான் ''இனி வீட்டை எம்பிடிப்போறது' அம்மா திட்டுவாளே போகும்போதே கள்ளர் கவனமெண்டு சொன்னாளே, துப்பறிய வெளிக்கிட்டு இருந்த சைக்கிலையும் துலைச்சுபோட்டு நிக்கிறேன் ஒரு கணத்திற்குள் சுழல் காற்றுக்குள் அகப்பட்டவன்போல் பதறினான். இப்ப ஜேம்ஸ் பாண்டோ, மாயாவியோ அல்லது அந்த சினிமா கதாநாயகர்களோ அவனுக்குதவ வரமாட்டார்களா? இல்லை வரமாட்டார்கள் உதெல்லாம் கவர்ச்சியான புனைகதைகள் தானே! வியாபாரத்திற்காக எழுதப்பட்ட போலிகள் தானே உதுகளை இனி கிழிச்செறியவேணும் என தீர்மானித்துக் கொண்டான்

தாடிக்காரனை நினைக்க நினைக்க ... சீ எப்படி ஏமாத்திப் போட்டு போட்டான் ஆத்திரம் பொத்துக்கிட்டு வந்தது ஆனால் வேறுவழியின்றி வீடுநோக்கி நடக்கத் தொடங்கினான்.

---

## கொஞ்சம் பொறுங்கள்...

''வானம் பொய்த்து விட்டதே!''
யாரோ...
வழிப்போக்கனின் அங்கலாய்ப்பு
எங்கே பொய்த்தது?
ஈழமாதா மண்ணிலா ?
இல்லவே இல்லை
மும்மாரி பொழிகிறதே -
மூளை கெட்டவனே !
மூன்று வேளையும் குண்டு மழை
பொழிகிறது.

''தாகம் ... தாகம்...''
யாரது உளறுவது?
ஆறுகள் உடைப்பெடுத்து ஓடுகின்றன
ஆம்... இரத்த ஆறுகள் -
அவை கிழக்கிலிருந்து
வடக்கு நோக்கியும்
வடக்கிலிருந்து கிழக்கு
நோக்கியும் பாய்கின்றன
அரசாங்கம் எத்தனை
கருணையுடையது பார்த்தாயா...?
வெள்ளத்தால் நிரம்பியிருக்கும்
சாலைகளில் தடுக்கி விழுந்து விடாதே!
மரங்களல்ல அவை...
மனித உடல்கள்.

''பசி... பசி...''
ஏன் கத்துகிறீர்கள்?
கொஞ்சம் பொறுங்கள்!
விமானங்கள் உணவுடன்
வருகின்றன.
கப்பல்கள் மாவுடன்
புறப்பட்டு விட்டன
அவை வரும் போது...
பதுங்கு குழிக்குள் ஓடுங்கள்
ஏனெனில் ... அவற்றிலிருந்து
பார்சல்களுக்குப் பதிலாக
பீரங்கிக் குண்டுகள் வரலாம்
மாவுக்குப் பதிலாக
மரணம்கூட வரலாம்.

''விடுதலை... விடுதலை...''
யாரோ பாடுகிறார்கள்
எவ்வளவு இனிமையாக இருக்கிறது?
அறுவடை நெருங்கி விட்டது
அனைத்து மக்களும் ஆயத்தமாகுங்கள்
அரிவாள்களுடனல்ல
துப்பாக்கிகளுடன்!
நாம் விரைவில் சேர்ந்துகொள்வோம்
களியாட்டங்களில் அல்ல
களத்தில் சேர்ந்து கொள்வோம்.

— வினோ

# அகில இலங்கை இளங்கலைஞர் மன்றத்தின்

# கலாமண்டபத் திறப்பு விழா

# சிறப்பிதழ்

**இடம்: சட்டநாதர் வீதி, நல்லூர்.**

**காலம்: 5, 6-02-1993**

## கலைத்தேவி மகிழும் பொன்னாள்

கலை என்பது உணர்ச்சிக்கும் கவர்ச்சிக்கும் பண்பாட்டுக்கும் நாகரிகத்துக்கும் எடுத்துக் காட்டாக விளங்குவது. தெய்வ நினைப்பையும் திருவருள் வனப்பையும் ஏற்படுத்துவது. கலைஞர்களின் பேச்சிலும் மூச்சிலும் நிரம்பி வழிவது வரண்ட வாழ்விற்கு தண்ணீர் தருவது. இதனாலேயே உலகம் கலைகளில் மூழ்கிக் கிடக்கிறது. கலைஞர்கள் என்றால் எங்கும் ஒரு வரவேற்பு உண்டு. எங்கள் தமிழ் ஈழ மண்ணில் இன்று இந்த வரவேற்பு மேலும் விரிவடைந்து வருவது பாராட்டுக்குரியது.

இன்னிசை வேந்தன் பொன். சுந்தரலிங்கத்தை அறியாதவர்கள் எவரும் இருக்கமாட்டார்கள். இவரின் ஆளுமையால் சிறந்த நாதஸ்வரக் கலைஞர்கள், மங்கள வாத்திய மேளதைகள், இசைக் கலைஞர்கள், ஒன்றுபட்டு பெரு முயற்சி எடுத்து நிறுவிய மண்டபத்தை இன்று நாம் கண்குளிரக் காண்கின்றோம். கவின் கலைக்கோர் நிலைக்களமாய் நுண்கலைக்கோர் உறைவிடமாய் விளங்கப்போகும் இளம் கலைஞர் மன்றக் கலா மண்டபம் திறக்கப்படும் நாள் கலைத்தேவிக்கு மகிழ்ச்சிதரும் பொன்னாளாகும். நமக்கெல்லாம் கலை உணர்வை ஊக்குவிக்கும் ஒரு நன்னாள் ஆகும் மனங்குளிர நல்ல இசை அமுதம், வயிறு குளிர நல்ல சுவை அமுதம், கண் குளிர நல்ல கலைஞர் கூட்டம், நிரம்பி வழியப் போகும் இந்நாளில் இளங்கலைஞர்கள் அனைவரையும் வாழ்த்தி நிறைவோடு இன்னிசை வேந்தர்க்கு நல்லாசி கூறி, ஒத்துழைப்பு நல்கிய புரவலர்க்கு நன்றி கூறி, அன்னையும் பணிக்கு பூரண ஆதரவு நல்கிய திருப்தி வர்த்தக நிலையத்திற்கு ஆசி சமர்ப்பித்து அமைகின்றேன்.

செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி
தலைவர்
ஸ்ரீ துர்க்கா தேவஸ்தானம்
தெல்லிப்பழை

## கலைஞர்களுடன் இணைந்து நாமும் களிப்படைகின்றோம்

யாழ். இளங் கலைஞர் மன்றமும், அதனுடன் இணைந்துள்ள தமிழீழக் கலைஞர்கள் பலரும் சேர்ந்து உருவாக்கிய கலா மண்டபத்தின் திறப்பு விழாவையிட்டு ஏற்படும் மகிழ்ச்சியில் கலைஞர்களுடன் இணைந்து விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகமும் பங்கேற்றுக் கொள்கின்றது. எமது தாயகத்தின் விடிவுக்கான விடுதலைப் போரின் மத்தியிலும் தமிழீழக் கலைஞர்கள் தளர்ந்து போகாது நிமிர்ந்துதான் நிற்கின்றார்கள் என்பதற்கான குறியீடுகளில் ஒன்றுதான் இந்தக் கலா மண்டபத்தின் உருவாக்கம் என்று நாம் கருதுகின்றோம், யாழ்ப்பாணத்தில் நல்லதோர் கலையரங்கம் இல்லையே என்ற கவலை இன்றுடன் ஒழிந்தது. கலைஞர்கள் அனைவரும் ஒன்றிணைந்து நிற்கின்றார்கள் என்ற உணர்வு இன்றுடன் எழுந்தது.

யுத்தத்தின் சத்தங்களுக்கு மத்தியிலும்
சங்கீதம்;
எத்தனை இடர்களுக்கு இடையேயும்
நாட்டியம்.

எல்லாக் கலைகளும் தாயகத்தின் விடுதலை நோக்கிய பயணத்திற்கானவை என்ற உறுதி எங்கள் கலைஞர்களின் மத்தியில் இன்று பேரெழுச்சியாகக் காணப்படுவது எமக்கு மகிழ்ச்சி தருகின்றது. இந்தக் கலா மண்டபத்தை உருவாக்குவதில் முன்னின்று உழைத்த அனைத்துக் கலைஞர்களையும் நாங்கள் பாராட்டுகின்றோம். எல்லோருக்கும் எல்லாமுமாகிய ஒரு சமூக அமைப்புக்காகவும், தமிழீழத் தாயகத்துக்காகவும் போராடும் நாங்கள் கலை வளர்ச்சியிலும் முழுமை பெற்று உயர இந்த மண்டபம் தன் பங்களிப்பை ஆற்றுமென நம்புகின்றோம்.

'புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்'

புதுவை இரத்தினதுரை
பொறுப்பாளர்,
விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகம், தமிழீழம்

## வாழ்த்துப்பா

இராகம் - சாருகேசி தாளம் - ஆதி

பல்லவி

இளங்கலைஞ பெய ராலே
வளம் பெற்றுயர்ந் தோங்கி
களஞ் சிறக்க மிளிர்ந் துயரும்
கலைத்தாயின் பொற்பதியே அற்புதமே
- இளங்கலைஞர்

அனுபல்லவி

உயர்கலைச் சேவையையே உன்பணியாய்த்
தொடர்ந்திடவே
நிறைந்தகலை மனிதர்களும் உன்பணியால்
சிறந்திடவும்
அறந்தாங்கி அற்புதமாய் நலம்பொலிய
நிறைந்திருப்பாய்
நயந்துன்னைப் போற்றிடுவார்- நாட்டினிலே
மலிந்துள்ளார் - இளங்கலைஞர்
நல்லதெய்வத் தலங்களெல்லாம் உனைச்சூழ்ந்
தமைந்ததனால்
வல்லதெய்வம் துணையிருக்கும் உள்ளபடி
நீயுயர்வாய்
கலைத்தாயின் பேரருளால் கவின்கலைகள்
பலவோடு
கருத்தான போதனையும் கண்ணெனச் சிறந்
திடவே -இளங்கலைஞர்

அ. நமசிவாயம்
ச. பாலசிங்கம்
இணைச்செயலாளர்கள்
யாழ். அண்ணாமலை இசைத்தமிழ் மன்றம்

## நித்தியம் நிலைக்கும் கலைப்பணி

இந்த மண் ணிடைநந் தமிழர்தம் கலைகள்
ஏற்றம் பெற் றிடும்வழி வகைகள்
சிந்தையில் நினைந்து பகலிர வாக
செயல்பல சூழ்ந்தநண் பர்பொன்
சுந்தரும் அவர்தம் பெருமுயற் சிக்குத்
துணைபுரி தொண்டரும் உழைக்க
விந்தையொன் றெழுந்து நிற்பது கண்டு
வியந்தனம்; வாழ்த்துவம் மகிழ்ந்தே!
கல்லெடுத் தடுக்கி சாந்துகொண் டமைத்த
கட்டிடம் தூண்மணிக் கதவு
நல்லிசை நடனம் நாடகம் பயிலும்
அரங்கொடு நாற்புறம் வீதி
சொல்லவொண் ணாத அழகுடன் பொலிந்து
துலங்குமோர் மண்டபம் காண
நல்லையூர் சட்ட நாதர்தம் சூழல்
நண்ணுமின் கலையுளம் படைத்தோர்!
மத்தளம், மேளம், நாயனம், வீணை
வயலின், வேய்ங்குழலொடு முகர்சிங்
ஒத்துநின் றிசைக்க - நூபுரம், சலங்கை
ஒலித்திட - நாடகக் கலைஞர்
வித்தகம் எல்லாம் வெளிப்பட - இளைய
கலைஞர்தம் மன்றிது விரிந்து
நித்தியம் நிலைக்கும் கலைப்பணி செய்து
நிமிருக உலகெலாம் வணங்க!

—கவிஞர் சோ. பத்மநாதன்

## "இசைக்கு இன்று எழுச்சி நாள்"

இசைக்கலையின் வளர்ச்சியையும், சிறப்பினையும் மேம்படுத்துவதற்காகவே அ. இ. இளங் கலைஞர் மன்றம் உருவாகி இன்று தனக்கென ஒரு ஆலயத்தையும் அமைத்து மலர்ந்திருக்கிறது என்பது நாமெல்லாம் பெருமையோடு ஒன்றுபட்டுப் போற்ற வேண்டிய பணியேயாகும். ஒரு நாட்டின் தலைமைப் பொறுப்பில் உள்ள அரசே அந்த மக்களின் கலையார்வத்தை இசைத்துறையின் வளர்ச்சியை கருத்திற் கொண்டு இத்தகைய உயர்ந்த மன்றங்களை அத்துறை சார்ந்த பலவகைத் தேவைகளுக்காக நிர்மாணித்து சமூகத்திற்கு வழங்க வேண்டும். ஆனால் அந்த அரசே அதினின்றும் தவறிய போது காலத்தின் தேவையறிந்து தனி ஒரு மனிதரின் அயராத முயற்சியின் வெளிப்பாடாகவே இந்த அ. இ. இளங்கலைஞர் மன்றம் தோன்றி நிறைந்திருப்பதை எண்ணும் போது ஒவ்வொரு தமிழனும், குறிப்பாக இசைத்துறை ஆர்வலரும் நினைந்து இறும்பூதெய்தவேண்டிய உன்னத பண்பேயாகும்.

இன்னிசைவேந்தர் பொன் சுந்தரலிங்கம் அவர்களின் தனிப்பெரும் முயற்சி இன்று ஒரு சிறந்த நிறைந்த இசைக்கு எடுக்கப்பட்ட கோயிலாக மலர்ந்திருக்கிறது. இக்காலத்தில் எழக்கூடிய அத்தனை துன்பங்களையும் தன் 'அழிவிலாத மன உறுதி'யை துணைக்கொண்டே வென்று இந்த அற்புதப்பணியை நிறைவு செய்திருக்கிறார். 'கருமம் எண்ணித் துணியும்' அவர் இயல்பிற்கு அவரது சீரிய பணியின் சிறப்பிற்கு தலை வணங்கி பலரும் பல உதவி செய்திருக்கிறார்கள் எல்லாருக்குமாகவும் ஓடியாடி உவகையோடு உழைக்கின்ற திரு. பொன். சுந்தரலிங்கம் அவர்களின் உயர்ந்த உள்ளத்தை தெரிந்து கொண்டு எல்லோருமே அவருக்காக இளங்கலைஞர் மன்றப் பணியில் உதவியிருக்கிறார்கள். இந்த அகில இலங்கை இளங்கலைஞர் மன்றமும் அதன் சேவையும் இன்றைய காலத்தின் கட்டாயதேவையாகும். நாடுசுபீட்சமாக இருக்கையில் செய்யும் கலைப்பணி, இசைத்துறைப் பணிகளை விட துன்பஞ் சூழ்ந்து துயரம் மிகுந்த வேளையில் தான் இசைக்கலைப்பணி மிக மிக அத்தியாவசியமாகும். 'துன்பம் நேர்கையில் யாழெடுத்து நீ இன்பம் சேர்க்க மாட்டாயா?' என தமிழ்ச் சமூகம் கேட்ட பணியாகவே திரு. பொன் சுந்தரலிங்கம் அவர்கள் இந்த முயற்சியை முன்னெடுத்து வெற்றிகண்டு அ. இ. இளங்கலைஞர் மன்ற திறப்பு விழாவை அமைத்திருக்கிறார் அவர் நிறைந்து வாழ்க! அவரது இசைப் பணி நிறைந்து வாழ்க அகில இலங்கை இளங்கலைஞர் மன்றம் பொலிந்து சிறப்புறுக

இ. ஜெயராஜ்
அமைப்பாளர் அகில இலங்கை கம்பன் கழகம்

## மனமார்ந்த நன்றி

இலை மறை காயாக இருக்கும் கலைஞர்களை இனம் காணவும் அவர்கள் திறன்களை வெளிக்கொணரவும் கருதி நிறுவப்பட்டதே இளங் கலைஞர் மன்றம். ஆண்டுதோறும் இசை விழா எடுத்தும், போட்டிகள் நடாத்தியும், பரிசுகள் வழங்கியும், மன்றம் இளங்கலைஞர்களை ஊக்குவித்து வந்துள்ளது இன்று முன்னணியில் உள்ள பல கலைஞர்கள் எமது போட்டிகளில் கலந்துகொண்டு பரிசு பெற்றவர்கள் எனக் காணும்போது மன நிறைவு ஏற்படுகிறது.

கலைஞர்களுடைய ஒத்துழைப்பினாலும் மக்களுடைய துணையாலும் இன்று இளங்கலைஞர் மன்றக் கலாமண்டபம் நிமிர்ந்து நிற்கிறது.

மன்றத் தலைவர் என்ற வகையில் இக் கலைப் பணிக்கு உதவிய அனைவர்க்கும் என் மனமார்ந்த நன்றியறிதலை தெரிவித்துக்கொள்கின்றேன்.

பொன். சுந்தரலிங்கம்
தலைவர், இளங்கலைஞர் மன்றம்

## காலத்தினால் செய்யும் உதவி

ஓர் இனத்தின் தனித்துவத்தை பேணுவதற்கு கலை பண்பாடுகள் அழிவுறாமல் காக்கப்பட வேண்டும். அதில் இளங் கலைஞர்களின் பங்கு முக்கியமானதாகும். கலைஞர்களைப் பயிற்றுவிப்பது மாத்திரமல்ல, இக்கலைஞர்கள் தங்களுடைய திறமைகளை அரங்கேற்றுவதற்கு நவீன வசதிகளைக் கொண்ட அரங்குகள், திறந்தவெளி அரங்குகள் மற்றும் அவர்களின் நிகழ்ச்சிகளைப் பதிவு செய்யக்கூடிய ஸ்ருடியோக்களும் அமையவேண்டும். தற்போது எங்களிடம் இவ்வாறான வசதிகள் இல்லை நகரில் இருந்த திரையரங்குகள், வீரசிங்க மண்டபம் யாவும் அழிக்கப்பட்டு விட்டன. இந்நிலையில் நகரில் கலை நிகழ்ச்சிகள் பாடசாலைகள், பல்கலைக் கழக மண்டபங்களிலேயே நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் இம் மண்டபத் திறப்புவிழா பெரும் உதவியாக அமையும். இதனை நிறுவுவதற்கு முயன்ற யாவரும் பாராட்டப்பட வேண்டியவர்கள். இவ் இளம் கலைஞர் மன்றத்தின் முயற்சிகள் மேலும் வளர்ச்சி பெற இறைவனைவேண்டுகிறேன்; வாழ்த்துகிறேன்.

பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை
கலைப்பீடாதிபதி
யாழ். பல்கலைக்கழகம்

திறப்பு விழா சிறக்க வாழ்த்துவோர்

அண்ணா தொழிலகம் இணுவில்

(சி-5941)

## 2-ம் ஆண்டு நினைவலைகள்

### கப்டன் கேதீஸ்

(பாக்கியராசா றொபேட் நிக்சன்)

தாயக மண்ணில்: 26-1-1969 — தாயக விடிவில் 5-2-1991

திருமலை நாட்டினிலே அன்புவழி புரத்தினிலே
பூத்த புனிதனடா
களங்கள் பல கண்டும்
கலங்காத வேங்கையடா
முல்லைச் சிரிப்பாலே முறுவலித்தெமை
அல்லும் பகலும் நிறைவுடனே மகிழ்வூட்டி
இணைபிரியா உயிர்த்தோழனவன் மயூரனுடன் சேர்ந்து
குறும்புகள் பல செய்து - எம்
கவலைகளை சிதறடித்தாயடா - உன்
தோழனவன் மயூரனையும்
தவிக்க விட்டு விட்டு
உரிமை உணர்வுகள்
உரமாகிப் போனதனால் - உன்
உதிரம் பெருக்கெடுக்க
தச்சன் காட்டினிலே உயிரை விதைத்தனையோ!
இரண்டாம் ஆண்டாகி விட்டாலும்
உனை நேசித்த காரணத்தால்
உள்ளங்கள் பல இங்கு
பொங்கித் தவிக்குதடா!

உன்னை நினைத்துருகும்;
உன் உயிர்த்தோழன் மயூரன்,
கப்டன் மொறிஸ் குடும்பத்தினர்,
கணேஸ் அத்தான் குடும்பம்.

ஆத்தியடி,
பருத்தித்துறை.

(4216)


## லக்கி இன்ஸ்ரிரியூட்

K. K. S. றோட், சுன்னாகம்.

(தேசிய சேமிப்பு வங்கி அருகாமையில்)

### (DAY CLASS)

ஆரம்பம்: 9 2-93 (செவ்வாய் காலை 8.30)

யாழ். ஆசிரியர் குழு

- ★ பொருளியல் — Mr. மகேந்திரன்
- ★ வர்த்தகம் — Mr. பசில்
- ★ தமிழ் — Mr. அமரசிவம்
- ★ அரசியல் — Mr கியூபேட்
- ★ கணக்கியல் — Mr SAM
- ★ அளவையியல் — Mr. சோதிலிங்கம்
- ★ இந்துநாகரிகம் — Mrs. அருள்நங்கை

A/L 92 பரீட்சை எடுத்த மாணவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர்.)

### (Spoken English with Grammar)

By : MR. BRITTO

ஆரம்பம் : 5-2-93 (இன்று)
காலை 9.00 மணி

(சி-5937)



# BECON

(பாரதிதாசன் கல்வி நிறுவனம்)

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக

B A. பகுதி I புதிய பிரிவுகள்

ஆரம்பம்: 06- 02- 93 காலை 9.00 மணி

| | | | |
|---|---|---|---|
| பொருளியல் | 10-11 | — | வரதராஜன் B.A. (HONS) |
| இந்துநாகரிகம் | 11-12 | — | சிவமகாலிங்கம் B.A. |
| தமிழ் | 12-1 | — | கணேசலிங்கம் B.A. (HONS) |
| மெய்யியல் | 9-10 | — | பிரபல ஆசிரியர் |

குறிப்பு: பேராதனை பல்கலைக்கழக G. A. Q., B. A. வகுப்புகள் நடைபெறுகின்றன.

(சி-5940


## இன உணர்வுக்

ளின் கவிதைகள் சில பின்னர் இசை சேர்க்கப்பட்டு இசைப்பாடல்களாக ஒலிப்பதிவு செய்யப்பட்டன. பின்னர் இசைப்பாடல்கள் தொகுக்கப்பட்டு நூலுருப் பெற்றபோது நூலில் (எழுச்சிப்பாடல்கள்) இடம்பெற்றன [(உ-ம்) காசி ஆனந்தனின் 'காசி ஆனந்தன் கவிதைகள்' தொகுதியில் இடம்பெற்ற மறவர் படைதான் தமிழ்ப் படை என்ற பாடல், மானம் எனுமொரு பானையில் வாழ்வெனும் தீனி சமைத்தவனே என்ற பாடல்] இவ்விருபாடல்களும் எழுச்சிப்பாடல் தொகுதி 1-ல இடம்பெற்றுள்ளன. இந்த வகையிலே கவிதைகளுக்கும், இசைப் பாடல்களுக்குமுள்ள வேறுபாடு ஆய்வாளரால் சுட்டிக் காட்டப்படவில்லை.

மேற்கூறிய இரு கவிஞர்களின் கவிதைகளில் அனேக கவிதைகளை ஆய்வாளர் தமது ஆய்வில் சுட்டிக்காட்டியிருந்த போதிலும், புதுவை இரத்தினதுரையின கவிதைத் தொகுதியில் மிகவும் சிறப்பானது என எல்லோராலும் எடுத்துரைக்கப்படும் 'ஒரு தோழனின் காதல் கடிதம்' என்ற தொகுதியில் உள்ள கவிதைகளையும், மிக அண்மையில் வெளிவந்து தமிழீழ மக்கள் அனைவரின் பாராட்டையும் தட்டிக்கொண்ட 'நெய்தல் ஒலிப்பதிவு நாடாவில் உள்ள வெள்ளி நிலா விளக்கேற்றும் நேரம் .. ஆழக் கடலெங்கும , என்றஇசைப் பாடல்களையும், மாவீரர் தினத்தில் (26- 1-1992) மாவீரர் துயிலும் இல்லங்களில் முதன்முதல் ஒலிபரப்பாகி எல்லோரையும் கண்ணீர்சிந்த வைத்த 'எங்கே எங்கே ஒரு கரம் விழிகளை இங்கே திறவுங்கள்' என்ற பாடலடியை தன்னகத்தே கொண்ட பாடலையும், காசி ஆனந்தனின் 'நம்புங்கள் தமிழீழம் நாளை பிறக்கும்' (இசைப்பாடல்) என்ற இனிய பாடலையும் தியாகிதிலீபனின் தற்கொடையின் பின ஐயா திலீபன எங்கையாபோகின்றாய்' (ஈழமுரசில் வெளிவந்தது) என்ற நெஞ்சையுருக்கி இந்தியாவின் துரோகத்தை எடுத்துரைக்கும் வரிகளைக் கொண்ட (கடலிற்குஅப்பாலேகரையுண்டு என்றிருந்தோம். கரையே கடலானால் எங்கு போய் கால் வைப்போம்) கவிதையையும் இவ் ஆய்வில் இணைத்திருந்தால் மேலும் சிறப்பாக அமைந்திருக்கும் என்று எண்ணத்தோன்றுகிறது.

இதைவிட காலந்தோறும் இனவுணர்வுக் கவிதைகள்எழுதிய கவிஞர்களின் பெயர்களைக் குறிபபிட்டிருந்த போதிலும் அவர்களின் கவிதைகள் பல எடுத்துரைக்கப்படவில்லை. (உ-ம் பண்டிதர் க. சச்சிதானந்தம் அவர்களின் சாகும் போதும் தமிழ்படித்துச் சாகவேண்டும், என்சாம்பலிலும் தமிழின் மணம்வேக வேண்டும்.)

தமிழீழத் தேசியப் போராட்டத்தில் பல்வேறு கவிஞர்களால்- கலைஞர்களால் ஆக்கப்பட்டுவரும் தரமானபடைப்புகள் ஒவ்வொன்றும் தனித்தனி ஆய்வுக்குட்பட வேண்டியவை. இவ்வகை ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டியது எமது வரலாற்றுக்கடமையாகும். முன்மாதிரியாக மேற்கொண்ட செல்வி சந்திராவின் ஆய்வைத்தொடர்ந்து மேலும் மேலும் ஆய்வுகளும் விமர்சனங்களும் மேற்கொள்ளப்பட வேண்டும் அன்றைய ஆய்வரங்கில் சபையோர்கருத்தில், ஆய்வுத் தலைப்பையும் ஆய்வாளரையும் பாராட்டி இதே போன்ற ஆய்வுகள் தொடர வேண்டும் என்ற பாராட்டுக் குறிப்பொன்றும் அங்கிருந்த 'சுவைஞர்' ஒருவரால் தெரிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

## 4ஆம் ஆண்டு நினைவலைகள்



நவாலியைச் சேர்ந்த

### கந்தசாமி சண்முகசுந்தரம்

மண்ணின்மடியில் 18-02-1945 — அராஜகத்தின் பிடியில் 05-02-1989

ஊருக்கு உழைத்து உயர்ந்தவர்
உண்மையை மதிக்கும் உத்தமர்
யாருக்கும் தீங்கு இழைத்திடார்
அமைதியின் சின்னமாய்த் திகழ்ந்தவர்
நாணயமாக வாழ்ந்தவர்
நரிகள் ஊழியில் மாண்டவர்
என்றுமெம் இதயமெல்லாம் வாழ்வார்.

நவாலி வடக்கு,
மானிப்பாய்.

மனைவி,
பிள்ளைகள், தாய்,
சகோதரர்கள்,
உறவினர்கள்,
நண்பர்கள்.

(4219)

## ஈராண்டு நினைவலைகள்



### மேஜர் ஸ்ரீ

[கதிர்காமத்தம்பி ராஜஸ்ரீ]

தாயின் மடியில் மலர்வு 17-07-1969 — தாயக மண்ணில் உதிர்வு 05-02-1991

தம்பியின் பாதையில் சென்ற - எம்
தம்பி ஸ்ரீயே
மரணத்தைக் கண்டு அஞ்சாது
மரணத்தைச் சவாலாக ஏற்றனையோ?
தமிழ்த் தாயின் விலங் கொடித்து
சுதந்திரமாய் விடுமுன்னே
நெஞ்சினில் குண்டேந்திய
தியாகச் செம்மலே
ஆண்டுகள் இரண் டென்ன
ஆயிரம் போனாலும்
ஆண்புலி வீரனுன்னை மறப்போமா

(05-02-1991 அன்று இவருடன் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட ஏனைய 29 வீரவேங்கைகளுக்கும்எமதுசிரம் தாழ்ந்த அஞ்சலிகள் சமர்ப்பணம்)

உன்பிரிவால் வாடும்

காவல்துறை வீதி,
டச்சுறோட்
சாவகச்சேரி.

அம்மா, சகோதர சகோதரிகள்
உற்றார், உறவினர், நண்பர்கள்

(4218)

# 'கற்பழிப்பு' முகாம்களும் கருவூட்டல் கொடுமையும்

# பொஸ்னிய இனக்கொலையின் கோரவடிவம்

## பாலகுமாரன்

**முந்திய யூகோஸ்சிலேவியா இன்று பல நாடுகளாக உடைந்து, அங்குள்ள தேசிய இனங்கள் மத்தியில் ஒரு கொடூரமான உள்நாட்டு யுத்தம் வெடித்திருக்கிறது. பெரும்பான்மை இனமான சேர்பியர்கள் சிறுபான்மை இனமாகிய பொஸ்னிய மக்கள் மீது ஓர் இன ஒழிப்பு யுத்தத்தைக் கட்டவிழ்த்து விட்டிருக்கிறார்கள். இந்த இன ஒழிப்புப் போரின் கோரமான வடிவங்கள் பற்றி இக்கட்டுரை எடுத்து விளக்குகிறது.**

ஒரு இனத்தை எவ்வாறு திட்டமிட்டு அழிப்பது? அந்த இனத்தின் தேசிய ஆன்மாவை எவ்வாறு சாகடிப்பது? பொஸ்னியாவில் சேர்பிய பேரினவாதிகள் மேற்கொண்டு வரும் கொடுமைகளை கூர்மையாக அவதானித்தால் இந்த வினாக்களுக்கு விடை கண்டு விடலாம். இதுவரை எங்கும் எப்போதும் நிகழாக் கொடுமைகள் - கிட்லரையும் மிஞ்சிய படுபாதகச்செயல்கள்-உலகின் மனச்சான்றை [அவ்வாறு ஒன்று இருந்தால்] உலுக்கி விடும் வன்முறைகள் - இவை யாவும் உள்ளடக்கிய "இனச் சுத்திகரிப்பு" எனும் கொடூரமான நிகழ்வொன்று பொஸ்னியாவில் சேர்பியரால் அரங்கேற்றப்படுகிறது. தாராண்மைவாதம், பரந்து விரிந்த மனித நேயம், பண்பாட்டின் மையம் எனப் போற்றப்படும் ஐரோப்பாவில் - அதுவும் சமதருமம் வேரோடியிருப்பதாக முன்னுதாரணம் கூறப்பட்ட நாடொன்றில் இவை நிகழ்வது வரலாற்றின் கொடுமையான முரண்பாடாகும்

இனச்சுத்திகரிப்பு என்கிற இனவெறிக் கோட்பாட்டின் அடிப்படையில் பொஸ்னியாவின் பெரும்பான்மை முஸ்லிம் குரோசிய இனமக்களை திட்டமிட்ட செயல் முறையொன்றின் கீழ் அவர்களது தாயகத்திலிருந்து சேர்பியர் விரட்டி வருகின்றனர். ஏறத்தாழ 20,000 பொஸ்னிய மக்களை குறிப்பாக முஸ்லிம்களை இதுவரை சேர்பியர் கொன்றுவளதாக கருதப்படுகின்றது.

பொஸ்னிய கிராமங்கள் நகரங்கள் எங்கு நுழைந்தாலும் சேர்பியர் முதலில் செய்வது இதுதான் அப்பகுதியின் முன்னணி குடிமக்கள் பல்கலைக் கழக பட்டதாரிகள் தொழில் முயற்சியாளர் பொஸ்னியா சனநாயக செயல்பாட்டுக் கட்சியின் உறுப்பினர்களை முதலில் கொன்று விடுகின்றனர். பின்னர் ஏனைய ஆண்களை தடுப்பு முகாம்களில் ஆயிரக்கணக்கிலடைத்து விடுவர். இவர்கள் கடும்பனியாலும் கொடும்பசியாலும் வாடி மெலிந்து எலும்புக்கூடுகளாகும் வரையும் வதைக்கப்படுவர். அதாவது சேர்பியரை எதிர்க்கும் உடலாற்றலை இழக்கும்வரை இது தொடரும் தமது குழந்தைகளாவது தப்பட்டும் என பொஸ்னிய பெற்றோர் பலர் ஆயிரக்கணக்கில் தமது பச்சிளம் பாலகர்களை கண்காணாத தேசங்கட்கு அனுப்பி விட்டனர். பெறறோரை பிரிந்துசெல்லும் இக்குழந்தைகளின் மனத்துயர் மிகக் கொடியது. இக்கொடுமைகட்கு எல்லாம் சிகரம் வைத்தால் போன்று பொஸ்னிய பெண்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகள் இப்போதுதான் படிப்படியாகப் அம்பலமாகத் தொடங்கியுள்ளன. பெரும் தொகையில் கூட்டாக பொஸ்னிய பெண்கள் மீதான பாலியல் வன்முறைப் பிரயோகங்களில்சேர்பியர் ஈடுபட்டிருப்பது (Mass Rape) அகதி முகாம்களில் உள்ள பொஸ்னய பெண்கள் அளிக்கும் தகவல்கள் மூலம் வெளியாகியுள்ளன. அகதி முகாம் தடுப்பு முகாம் எனக் கேள்விப்பட்ட உலகம் இப்போது பாலியல் வன்முறைக்கான முகாம்களை பற்றி கேள்விப்படுகின்றது. (Rape camp) பல நூற்றுக்கணக்காக பொஸ்னிய பெண்கள் அதாவது 6, 7 வயது சிறுமியர் உட்பட ஒவ்வொரு முகாமிலும் உள்ளனர். இங்கு இப்பெண்கள் சேர்பிய இராணுவத்தால் குடிமக்கள் போன்றோரால் தொடர்ந்த பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டு 'கருவூட்டப்' படுகின்றனர். இக்கருவூட்டல் எனும் செயற்பாடு இனச் சுத்திகரிப்பு கொள்கைகள் உச்ச செயற்பாடாக சேர்பியரால் கருதப்படுகின்றது. வெளிப்படையாக எந்த சேர்பியத் தலைவரும் இக் கருவூட்டல் செயற்பாட்டிற்கு உத்தரவிட்டதாக தெரியாதபோதும் பொஸ்னியாவில் உள்ள சேர்பிய உள்ளூர் படைத்தளபதிகள் தமது போர்வீரர்கட்கு இவ்வாறு உத்தரவு இட்டுள்ளது தெளிவாக தெரிகின்றது. இராணுவ உத்தரவாக இராணுவ நடவடிக்கையாக பொஸ்னியா முஸ்லிம் குரோசிய பெண்கள் குறிப்பாக (முஸ்லிம் பெண்கள்) மீதான பாலியல் வன்முறை ஊக்குவிக்கப்படுகின்றது. அண்மையில் கைதான சில சேர்பியர் மூலமும், இக்கொடுமைகளை தாளாமல் சேர்பிய இராணுவத்திலிருந்து தப்பியோடி வந்தோர் மூலமும் இச்செய்தி உறுதிப்படுத்தப்பட்டுள்ளது பாலியல் வன்முறையில் ஈடுபட தமக்கு உத்தரவிடப்பட்டதாகவும் அவ்வாறு செய்யாவிட்டால் தண்டிக்கப்படுவீர்கள் என எச்சரிக்கப்பட்டதாகவும் இவர்கள் கூறுகின்றனர் அத்தோடு இவ்வாறு பாலியல் வன்முறையில் ஈடுபடுவதன் மூலம் சேர்பியரின் போரிடும் மனவுறுதி அதிகரிக்கும் என ஆலோசனையும் வழங்கப்பட்டதாம் பாலியல் வன்முறைக்கு இரையான சில பொஸ்னிய முஸ்லிம் பெண்கள் தம்மீது வன்முறை பிரயோகித்தோர் சிலர் வேண்டா வெறுப்பாக செயற்பட்டதாகவும் இவ்வாறு செய்யாவிட்டால் தாம் சுடப்படுவோம் என தம்மிடம் கூறியதாக கூறியுள்ளனர்.

பொஸ்னியப் பெண்கள் மீதான கொடுமைகள் ஐரோப்பிய நாடுகளில் உள்ள பெண்ணுரிமை இயக்கங்களால் வெளிப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து அமெரிக்கா, ஐரோப்பிய சமூக நாடுகள் இது தொடர்பான புலனாய்வுகளை செய்து தகவல்கள் மட்டும் திரட்டுவதை தவிர வேறெதுவும் செய்யவில்லை. ஐ. நாவும் தன்பாட்டிற்கு கடந்த டிசம்பர் 18ஆம் திகதி பாதுகாப்பு சபையில் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றியதுதான் மிச்சம். அண்மைத் தகவல்களின் படி 30 000 — 50,000 இடைப்பட்ட பொஸ்னிய பெண்கள் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டது தெரிய வந்துள்ளது அவமானம், வெட்கம் காரணமாகவும், தமது இஸ்லாமிய மத நம்பிக்கை காரணமாகவும் அனேகமான பெண்கள் தமது துயரக் கதையை வெளிப்படக் கூறவில்லை அத்தோடு இவ்வாறு கொடுமைக்கு உள்ளான பெண்கள் பலர் கொலை செய்யப்பட்டும் விட்டனர். மேலும் பொஸ்னியாவில் ஊர் பகுதிகளில் என்ன நடக்கிறது என்பதே வெளியில் தெரியவில்லை ஏனென்றால் இன்னமும் பொஸ்னியாவின் 70வீதம்பகுதி சேர்பியர் கட்டுப்பாட்டிலே இருக்கின்றது. பொஸ்னியாவின் உட்பகுதிகளுக்கு போகக் கூடிய சூழல் ஏற்படும் போது இனச் சுத்திகரிப்புக்குட்பட்ட ஒவ்வொரு கிராமத்தின் தடுப்பு முகாம்களுக்கு அருகிலும் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டுசாகடிக்கப்பட்ட பெண்களின் புதைகுழிகளை காணலாம் என அமெரிக்க ஆய்வாளர் ஒருவர் கருதுகிறார்.

கிடைத்த தகவல்களின் படி பாலியல் வன்முறையும் திட்டமிட்ட செயல்பாட்டு ஒழுங்கில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. 6, 7 வயதுசிறுமியர் உட்பட பெண்கள் மீது கிரமமாக தொடர்ந்து பாலியல் வன்முறைப் பிரயோகம் கூட்டாக மேற்கொள்ளப்படும் (Gangrape) பாலியல் வன்முறை (இதில் பெண்கள் அனேகமாக இறந்துவிடுவர்) பெற்றோர், சகோதரர் முன்னிலையில் இளம் பெண்கள் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்படல், கருவூட்டப்படும் வரை பாலியல் வன்முறையைப் பிரயோகித்தல், மகப்பேறு நிகழும் வரை தடுத்துவைத்தல், என்பனவே இந்த ஒழுங்கு முறை ஆகும். இது குறித்து கிடைத்த மிகக்குறைவான தகவல்களே இக்கொடுமைகளை விவரிக்கின்றன. பூரணமான தகவல்கள் கிடைக்கும் போது இன்னும் எத்தனை கொடுமைகள் வருமோ?

பாலியல் வன்முறைக்கு உட்பட்டு பாதிக்கப்பட்ட பெண்களின் மனோ நிலை இங்கு வார்த்தைகளால் வருணிக்க முடியாது. அச்சமூட்டும் எதிர்காலம் அவர்கள் முன்னால் விரிந்து கிடக்கின்றது சேர்பியரின் கொடுமை தாங்காமல் இறப்பிலாவது சிறிது நிம்மதி கிட்டும் என ஏங்குவோர் பலர். கருத்தரித்தாலாவது கொஞ்சம் ஆறுதல் கிடைக்கும் என்ற நிலைக்குப் போனார் பலர். ஏனென்றால் அதன் பின்னாவது பாலியல் வன்முறைப் பிரயோகம்

[8ஆம் பக்கம் பார்க்க]

# இன உணர்வுக் கவிதைகளும் தமிழீழ விடுதலைப் போராட்டமும்

## நிலா

யாழ். பல்கலைக் கழகத்தில், தமிழ்த்துறையினரால் ஒழுங்கு செய்யப்பட்ட ஆய்வரங்கு 13-01-1993-ல் நடைபெற்றது. தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் அ சண்முகதாஸ் அவர்களின் தலைமையில் இடம்பெற்ற இவ் ஆய்வரங்குத் தொடரில் உதவி விரிவுரையாளர் செல்வி க. சந்திரா 'இனவுணர்வுக் கவிதைகளும் தமிழீழ விடுதலைப் போராட்டமும்- காசி ஆனந்தன், புதுவை இரத்தினதுரை கவிதைகள் பற்றிய ஆய்வு' என்ற தலைப்பில் தனது ஆய்வை மேற் கொண்டார்.

தமிழீழ விடுதலைப் போராட்டம் ஓர் அறிமுகம், இனவுணர்வுக் கவிதைகளின் முகிழ்ப்பு, காசி ஆனந்தன் கவிதைகள், புதுவைஇரத்தின துரை கவிதைகள். நிறைவுரை என்ற ஐந்து நிலைகளில் விரிவாக மேற்கொள்ளப்பட்ட இவ் ஆய்வு தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றின் வளர்ச்சிப்பாதையினையும் இவ்வளர்ச்சிப் பாதையில்காலந்தோறும் இனவுணர்வுக் கவிதைகள் எழுதிய கவிஞர்களையும் இனங்காட்டி நின்றதுடன், தமிழீழ விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்து நிற்கும் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் போராளிக் கவிஞர்களான (இவர்கள் இருவரும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் தம்மை இணைத்துக் கொள்வதற்கு முன்னரே கவிஞர்களாக விளங்கியவர்கள்) காசி ஆனந்தன், புதுவை இரத்தினதுரை இருவரது கவிதைகளையும் சிறப்பாய்வு செய்வதாக அமைந்திருந்தது.

உலகளாவிய நிலையில் இன்று முனை படைந்து கொண்டு வருகின்ற தமிழீழப் போராட்ட வளர்ச்சிப்பாதையில் கவிதைக் கலையின் பங்களிப்பு கணிசமாக இடம் பெற்று வருவது நாம் அனைவரும் அறிந்ததே. இன்றைய தமிழீழ விடுதலைப் போராட்ட சூழ்நிலையில் கவிஞர் காசி ஆனந்தனும், கவிஞர் புதுவை இரத்தினதுரையும் தமது படைப்புக்கள் (கவிதைகள், இசைப்பாடல்கள்) மூலம் தமிழ் மக்கள் மத்தியில் நிலையான ஓர் இடத்தினைப் பெற்றுள்ளனர் என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. குழந்தைகள் முதல் முதியோர் வரை தமிழீழமெங்கும் ஒலித்துக் கொண்டிருக்கும் விடுதலைப் பாடல்களை விருப்பத்தோடு கேட்டு மகிழ்கின்றனர். விடுதலைப் போராட்டத்தோடு மக்களை ஒன்றிணைத்த இசைப்பாடல்களைப் பெருமளவில் எழுதி, பெருகிப்பாய்நதோடும்போராட்ட வரலாற்றில் இவ்விரு கவிஞர்களும் சங்கமித்து தங்களது படைப்பாற்றல் மூலம் ஒரு சாதனையை நிலைநாட்டி நிற்கின்றனர்.

இன்றைய தமிழீழ சமூக வாழ்வு நிலைகளையும், போராட்ட உணர்வுகளையும் வெளிப்படுத்தி நிற்கும் இவர்களது படைப்புகளைக் காலத்தின் கட்டாய தேவையை உணர்ந்து தனது ஆய்வுத் தலைப்பாக தேர்ந்தெடுத்து (இவ் ஆய்வு தமிழ் சிறப்பு இறுதியாண்டு தேர்வுக்குரிய ஆய்வுக் கட்டுரையாக 1991-ல் சமர்ப்பிக்கப்பட்டது) ஆய்வு செய்ய முன்வந்த செல்வி சந்திராவும். பல்கலைக்கழக மட்டத்திலே இவ் ஆய்வை ஒழுங்கு செய்து நடாத்திய தமிழ்த்துறையினரும் பாராட்டுக்குரியவர்கள்.

இதுவரை எவராலும் ஆய்வு செய்யப்படாத அதே சமயம் ஆய்வு செய்யப்பட வேண்டிய தொன்றாக இருந்துவந்த காசிஆனந்தன், புதுவை இரத்தினதுரை கவிதைகள் பற்றிய இவ் ஆய்வு முதன்முதல் மேற் கொள்ளப்பட்ட முயற்சி ஆதலாலும், ஆய்வுத் தலைப்பிற்கு ஏற்ப தமிழீழவிடுதலைப்போராட்ட அறிமுகம், இனவுணர்வுக்கவிதைகள் முகிழ்ப்பு காசிஆனந்தன், புதுவை இரத்தினதுரை கவிதைகள் சிறப்பாய்வு எனப் பல்வேறு முக்கிய விடயங்களை உள்ளடக்கி அமைந்திருந்ததாலும் மிக நீண்டு சென்றது எனினும் போராளிக் கவிஞர்கள் இருவரின் படைப்பாற்றலையும் இப்படைப்புகளின் தேவையையும் விளங்கிக் கொள்ள வழி சமைத்தது.

களக்கவிஞர்களின் ஆக்கங்களாக சிறுகதைகள், நாடகங்கள், கட்டுரைகள், கவிதைகள், இசைப்பாடல்கள் எனப் பல்வேறுபட்ட கலைப்படைப்புகள் இன்று எம்மத்தியில் நாள்தோறும் வந்து கொண்டிருக்கின்றன. இந்தப் 'புதிய அலை' ஒரு வரலாற்று நிகழ்வாக அமையும் தன்மையைப் பெற்று நிற்கின்ற வேளையில், இரு கவிஞர்களதும் கவிதைகளையும் எடுத்துநோக்கினால் இவர்கள் இருவருமே தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் தம்மை இணைத்துக்கொள்ள முன்னரே கவிஞர்களாக விளங்கியவர்கள்என்பதையும், இருவரும் கவிதைகளையும் இசைப்பாடல்களையும் எழுதியவர்கள் என்பதையும் மனங்கொள்ள வேண்டியவர்களாகின்றோம். கவிதை வேறு இசைப்பாடல் வேறு. இவர்

(6ஆம் பக்கம் பார்க்க)

## கருவழிப்பு

கொடுமை நிற்குமல்லவா? 30 வயதான சேபியா என்ற பொஸ்னியா முஸ்லிம் பெண்ணின் சோகத்தைப்பாருங்கள்; இப்பெண் இடைவிடாது தொடர்ந்து ஒவ்வொரு இரவும் ஆறு மாத காலத்திற்கு வெவ்வேறு 5, 6 சேர்பிய இராணுவத்தினரால் பாலியல் வன்முறைக்கு உள்ளானாள் கருத்தரித்த பின் கடந்த செப்டெம்பர் மாதம் விடுவிக்கப்பட்டாள். பெற்றோரிடம் போக விரும்பாது செராஜிவோ நகர வைத்தியசாலையொன்றில் மறைந்து வாழ்கிறாள். இவளைப் போல் பல பெண்கள் இங்கு இருக்கிறார்கள். தனக்குள் வளரும் குழந்தை தனக்கு வேண்டாம். இக்குழந்தைக்குநான் பாலூட்டேன் எனக் கதறுகிறாள். இரவில் துயிலும் போதுகூட இக்குழந்தையை கொலை தா இல்லையா என்கிற மனக் குழப்பத்தில் ஓயாது வாய் பிதற்றிய வண்ணமே உள்ளாள். சேர்பிய வதை முகாம்களில் கருவூட்டப்பட்ட பெண்கள் அவர்கள் இனிக் கருக்கலைப்பு செய்யும் காலம் கடந்து விட்டனர் என்பதை உறுதிப்படுத்திய பின்னரே விடுவிக்கப்படுகிறார்கள். எனவே கருக்கலைப்பு செய்ய முடியாது வேண்டாக் குழந்தையை சுமந்து நரகவாழ்வு வாழ்கிறார்கள். யூகோஸ்லேவிய மருத்துவச் சட்டமோ கருத்தரித்த 10 வாரத்திற்கு பின் கருக்கலைப்பு செய்ய முடியாது என வைத்தியரை வேறுசட்டுப்படுத்துவதால் கருக்கலைப்புச் செய்யக்கூடிய பெண்கள் கூட இதனால் பாதிக்கப்படுகின்றனர். அத்தோடு குரோசியாவில் தஞ்சம் புகுந்துள்ள பொஸ்னிய மக்கள் தொகை 4 இலட்சமாகும். ஆனால் கருவூட்டப்பட்ட தாய்மார்க்கு பிறக்கும் சேர்பியக் குழந்தைகளை குரோசியா பாராமரிக்கும் என எவரும் எதிர்பார்க்க முடியாது.

பாலியல் வன்முறையை பிரயோகித்தல் என்பதே சேர்பியரின் இன அழிப்புக் கொள்கையின் இறுதி வடிவமாகும். எதிர்வரும் காலங்களில் இவ்வாறு வேண்டா தாய்மார்க்கு பிறக்கப்போகும் சேர்பியக் குழந்தைகள் பொஸ்னியாவின் எதிர்காலத்தை அலைக்கழிக்கப்போகின்றன. பாரிய பிரச்சினையாக இதுபொஸ்னியாமுன் விசுவரூபம் எடுத்துள்ளது. எது எவ்வாறு இருந்தாலும் இற்றை வரை இந்த பாலியல் வன்முறைப் போரில் சேர்பியர் வெற்றி பெற்றுள்ளனர் என்பதே மிகக் கசப்பான உண்மையாகும்.

இக்கொடுமைகளை இழைத்தவர்களை இந்த உலகம் என்ன செய்யப் போகின்றது? இதுவே இன்று எழுந்துள்ள கேள்வி. இவர்கள் போர்க் காலக் குற்றவாளிகள் என பொதுவாக கூறப்படுகின்றது. இவ்வாறு 10 சேர்பியர் தலைவர்கள் அமெரிக்க வெளிவிவகார அமைச்சால் அடையாளம் காணப்பட்டுள்ள இவர்களில் சேர்பிய ஜனாதிபதி வியோபிடான் மிலோசவிச் பொஸ்னியாவில் உள்ள சேர்பியத் தலைவர் றடோவான் கரவிச்சும் உள்ளடங்குவர். இரண்டாம் உலகப் போரின் பின் வெற்றி பெற்ற நேசநாடுகள் நாசிகள் இழைத்தகுற்றங்களை விசாரிக்கநடாத்தியநியூரம்பேர்ச் (NuremBergTrials) விசாரணைபோல் சேர்பியர் மீதும் நடாத்தப்படவேண்டும் எனகுரல்எழுப்பப்படுகின்றது. ஆனால் இவை எதுவுமேநடைமுறையில சாத்தியப்படப்போவதில்லை. ஏனென்றால் 2-ம் உலகப் போரின்பின் நேசநாடுகள் வெற்றிபெற்றன ஆனால் போல்கன் பகுதியில்இப்போது நடக்கும் போரில் சேர்பியரே இற்றை வரைவெற்றி பெற்று வருகின்றனர். போர்க்குற்றங்களை ஆவணப்படுத்தி விசாரிப்பதில் உள்ள கஷ்டம் ஒரு புறம் போக ஏதேனும் சமாதான உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டால் நிச்சயம் சேர்பியர் தப்பித்து விடுவார்கள் என்பதும் திண்ணம். இது வரை பொஸ்னியா–கேசகோர்வினாவில் ஐ.நா.சபையாலும் ஐரோப்பிய சமூக நாடுகளாலும் இணைந்து மேற்கொள்ளப்பட்ட 18 போர்நிறுத்தங்கள்எப்பயனையும்தரவில்லை. அல்லது இவை விதித்த பொருளாதாரத் தடையோ ஆயுதத்தடையோ எவ்விதத் தாக்கத்தையும் சேர்பியர்மேல் ஏற்படுத்தியதாக தெரியவில்லை. மேலும் வழமையாக சேர்பிய நட்புறவு நாடாக இருந்து வரும் ருஷ்யாவின் நிலை தெளிவாக இல்லை. மொஸ்கோவில் உள்ள கடும் கோட்பாளர் சேர்பியர் பக்கம் சாயுமாறு யெல்சினுக்கு நிர்ப்பந்தம் கொடுத்துவருகின்றனர். எனவே சேபியருக்கு எதிராக இராணுவ நடவடிக்கை என்று வரும்போது ருஷ்யா என்ன செய்யும் என்பதுதெளிவாக இல்லை. சேர்பியரின் சில நிலைகளை விமானம் மூலம் தாக்குவதைத் தவிர இராணுவ நடவடிக்கைகள் பெரிதாக சாதிக்காது எனக் கருதப்படுகின்றது இன்னொரு வியட்னாமாக இப்பிரதேசம் மாறிவிடுமா என்கிற பயம் அமெரிக்காவுக்கு இதுதொடர்பாக இருப்பதாக தெரிகிறது. மிக அண்மையில் இறுதியாக ஐ. நாவாலும் ஐரோப்பிய சமூகத்தாலும் ஏற்பாடு செய்யப்பட்ட ஜெனிவா பேச்சுவார்த்தையும் எதிர்பார்த்த பயனை தரவில்லை. பொஸ்னியாவில் சுயாட்சியுள்ள 10 பிரதேசங்களாக பிரிக்க வைக்கட்பட்ட ஆலோசனை முழுமையாக ஏற்கப்படவில்லை. ஆகவே பொஸ்னியாமக்களின் கதி என்ன?

மனித உரிமை, தார்மிகம் பற்றி வாய்கிழியப் பேசும் மேற்கைரோப்பிய நாடுகளின் இயலாத்தன்மையின் உண்மை முகம் இப்போது போல் எப்போதும்வெளிப்பட்டதில்லை. உலகில் மனச்சான்று என்று ஒன்று இருக்கிறதா என்பதே இன்று கேள்வியாக எழுந்துள்ளது.

## முடிவுதிகதிநீடிப்பு

### ஈழநாதம்

### 3ஆம் ஆண்டு நிறைவுப் போட்டி

சிறுகதை, கவிதை, கருத்துப்படம் ஆகியவற்றிற்கு நடாத்தப்படும் போட்டி முடிவு திகதி அனேக கலைஞர்களின் வேண்டுகோளுக்கு இணங்க 05.02.1998 இலிருந்து 07.02.98 வரை நீடிக்கப்பட்டுள்ளது இத்திகதிக்குப் பிந்திய ஆக்கங்கள் எதுவும் எக்காரணம் கொண்டுப் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என அறியத்தருகிறோம்.

## கிழக்கில் மக்களின் இடப்பெயர்ச்சி

அம்பாறை மாவட்டத்தில் பொத்துவில் கிராமத்திலிருந்து வெளியேறிய மக்கள் கோமாரியில் வாழ்கிறார்கள். மல்லிகைத்தீவு, வீரமுனை, சென்றல் காம் ஆகியன பாரம்பரிய தமிழ்க் கிராமங்கள். இராணுவ அனர்த்தங்களால் இங்கிருந்து வெளியேறிய மக்கள் திருக்கோயில், தம்பிலுவில், அக்கரைப்பற்று ஆகிய இடங்களில் குடியேறி முகாம்களில் வாழ்கிறார்கள். முகாம்களிலும் அடிப்படைச் சுகாதாரத் தேவைகள் கூட சரியாகக் கவனிக்கப்படவில்லை. மகாவலி அபிவிருத்தித் திட்டம் என்ற போர்வையில் தமிழ்க் கிராமங்களில் சிங்கள மக்களின் குடியேற்றங்கள் இடம் பெறுகின்றன. புல்லுமலையில் சிங்கள மக்கள்குடியேற்றப்படுகிறார்கள். மட்டக்களப்பு- பொலநறுவை எல்லைப்புறக் கிராமங்களில் அமைந்துள்ள கரும்பளை, முந்துக்கல, சொறிவில் ஆகிய தமிழ்க் கிராமங்களிலிருந்து திட்டமிட்டஅடிப்படையில் தமிழ் மக்கள் வெளியேற்றப்படுகிறார்கள்.

தமிழர் - முஸ்லிம் உறவு பற்றிக் கேட்டபோது-

கடந்த டிசம்பர் 26 ஆம் திகதி இராணுவ முகாமிலிருந்து சுமார் 300 யார் தொலைவில் (மியாம்குளம் சந்தி) இடம் பெற்ற கண்ணிவெடித் தாக்குதலில் முஸ்லிம்களான உதவி அரசாங்க அதிபர், மேலதிக அரசாங்க அதிபர், சட்டத்தரணி, மற்றொரு முஸ்லிம் உள்ளிட்ட தமிழரான ஒரு சாரதியும் உயிரிழந்தார்கள்.

முஸ்லிம்கள் விழிப்புடன் இருந்தபடியால் உண்மையை அறிந்து கொள்ள முடிந்தது. இந்தக் கண்ணிவெடித் தாக்குதலில் இராணுவம் சம்பந்தப்பட்டிருப்பதைமுஸ்லிம்கள் அறிந்து கொள்ள அதிககாலம் எடுக்கவில்லை. வெளியூர்முஸ்லிம்களும் இராணுவத்தின் இரட்டை வேடத்தைப் புரிந்து கொண்டனர். இராணுவத்தைக் கண்டித்து ஆர்ப்பாட்டப் பேரணிகள் நடத்தினர். இப்போது அரசியலில் விசாரணைக் குழு ஒன்றும் நியமிக்கப்பட்டுள்ளது என்று கூறிய அவர்-

நகரங்கள் தான் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ளன. மட்டக்களப்பில் புலிகளை அடக்கியுள்ளதாக இராணுவம் பிரசாரம் செய்கிறது இராணுவம் கிராமப் பக்கம் திரும்பியும் பார்க்க முடியாது. கிராமங்கள் எமது கட்டுப்பாட்டில் உள்ளன. இராணுவத்தின் மீது எமது தாக்குதல்களும், வெற்றிகளும் உலகிற்கு உண்மையை எடுத்துக் காட்டுகின்றன, எமது தாக்குதல்களினால் தோல்வியுற்ற இராணுவம் அப்பாவிப்பொது மக்களைத் தாக்குவதில் ஈடுபட்டுள்ளது. இராணுவத்துடன் சேர்ந்தாற்போல் தேசவிரோதக் கும்பல்களும் தமிழர்களுக்கு இன்னல்களை ஏற்படுத்துகின்றன.

மககள் மத்தியில் எமது செயற்பாடு அதிகரித்துக் கொண்டே வருகிறது. 'சுதந்திரச்சுடர்' என்ற மாதாநதச் சஞ்சிகையையும் 'தாய் மண்' என்ற வாரப்பத்திரிகை ஒன்றையும் வெளியிடுகிறோம் 'மண்மீட்பு' என்ற ஒலிப்பதிவு நாடாவையும் வெளியிட்டுள்ளோம். இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள இடங்களுக்கும் இவை கடத்திச்செல்லப்படுகின்றன.

இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள இடங்களில் கூட மக்கள் மாவீரர் தினத்தைக் கொண்டாடினார்கள். தளபதி கிட்டுவின் மரணம் மக்கள் மததியில் எழுச்சியை ஏற்படுத்தியுள்ளது. துன்பங்களின் மத்தியிலும் மக்கள் நம்பிக்கையுடன் வாழ்கிறார்கள். தலைவர் பிரபாகரன் மீது நம்பிக்கையுடனும், விடிவு வரும் என்ற மனோதிடத்துடனும் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்றார்.


## 2-ம் வருட வீர அஞ்சலி



### வீரவேங்கை கண்ணன்

[கந்தையா பாலகிருஷ்ணன்]

வீர ஜனனம் : 1973 - 07 - 08

வீரச்சாவு : 1991 - 02 - 05

எம் கண்ணா...

வேங்கைகள் கூட்டத்தில்
விளைந்த விறல் வேங்கையே
சுதந்திர வேட்கையை நெஞ்சில்
ஏந்தி களத்தில் காவியமானாய்.

உன் பிரிவால் துடித்துத் துயருறும்

கண்ணன் வீதி, இத்தாவில், பளை

அம்மா, சகோதரர்கள், சகோதரிகள்

[உன்னுடன் வீரச்சாவை அணைத்த 29வேங்கைகளுக்கும் எமது அஞ்சலிகள்) [4225]

## நினைவலைகளில் ஈராண்டு



மண்ணகம் 27-1-1969

விண்ணகம் 05-2-1991

### மேஜர் சலீம்

(அல்போன்சஸ் யோண் பிறின்ஸ்ரன்)

(பாஷையூர், யாழ்ப்பாணம்.)

ஆண்டு ரெண்டு கடந்தாலும்
அல்போன்சஸ் யோண் பிறின்ஸ்ரன்
கூண்டு விட்டுக் கூண்டேறிக்
கொற்றவனின் பாத மதில்
தூண்டு மாமணி விளக்காய்த்
துலங்குகின்ற நினைவலைகள்
வேண்டுகின்ற மண்ணிதற்காய்
விண்ணடைந்த கதை சொல்லும்.

விண்ணடைந்த விறல் வேந்தை
விடிவிடிவாய் நினைக்கின்றோம்
மண்ணகத்துப் பாசெய் யூர்
மறத்தமிழ நண்பர் நாம்

[சி-5943] - குடும்ப நண்பர்கள்

யாழ்ப்பாணம்

# பூநகரிப் பாதையும் குடா நாட்டு முற்றுகையும்

இப் புத்தாண்டிலிருந்து பிரேமதாசா அரசு குடாநாட்டின் குரல்வளையை மேலும் இறுக்கமாகநெரிக்கத்தொடங்கியுள்ளது. பூகோள ரீதியில் யாழ்ப்பாணக் குடாநாட்டை வன்னிமாநிலத்துடன் துண்டித்துவிட அரசு முனைகிறது. இதனால் தமது சொந்த மண்ணில் சுதந்திரமாக பாதுகாப்பாக பயணம் செய்ய முடியாத ஒரு நெருக்கடி நிலைக்குள் தமிழ் மக்கள் தள்ளப்பட்டுள்ளனர். இந்த முற்றுகைதீவிரமடைவதால் குடாநாட்டில் உணவுப் பஞ்சம் தோன்றும் அபாயம் எழுந்துள்ளது. குடாநாட்டின்பத்து லட்சம் மக்களையும் பணயக் கைதிகளாக வைத்து யுத்தக் காய்களை நகர்த்த அரசு விரும்புகிறது. இதிலிருந்து இந்த யுத்தம் தமிழ் மக்களுக்கு எதிராகவே ஏவப்படுகிறது என்ற உண்மையை பிரேமதாசா அரசு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபித்து விட்டது.

1990-ம் ஆண்டு யூன் 10-ம் திகதி சிங்களப்படைகளுடன் போர் ஆரம்பமாகியதைத் தொடர்ந்து ஆனையிறவுப் பாதைக்குப்பதிலாக பூநகரி - சங்குப்பிட்டிப் பாதையை மக்கள்பயன்படுத்தத்தொடங்கினர்.

பின்னர்அப்பாதையை தடை செய்யும் நோக்குடன் 17.10.91 அன்று ஊர்காவற்றுறையில் சிங்களப்படைகள் தொடக்கிய இராணுவ நடவடிக்கை பூநகரியை கைப்பற்றி பூநகரி — சங்குப்பிட்டிப்பாதையை தடைசெய்ததுடன் முடிந்தது.

அதன் பின்னர் சிங்களவர்களாலேயே விடாமுயற்சிக்கு உதாரணம் காட்டப்படும் யாழ்ப்பாணமக்கள் மிகவும் சிரமப்பட்டு கொம்படி ஊரியான் ஊடான பாதைகளைப் பயன்படுத்தினர்.

வடதமிழீழ மக்களைப் பொறுத்தளவில் மிகப்பெரியளவில் மனித உழைப்பைச் செலுத்தி தமது உணவுப் பொருள்களையும் மற்றும் அத்தியாவசியப் பொருள்களையும் இத்தப்பாதைகளினூடாகத்தான் எடுத்து வந்தார்கள் என்பது பெருமையுடன் நினைவுகூரத்தக்கது.

தினந்தோறும் பலநூற்றுக் கணக்கான சிறிய படகுகளுடன் பல்லாயிரம் மனிதக்கைகளின் ஓயாத உழைப்புடன் வடதமிழீழ மக்களின் வாழ்வியக்கம் தொடர்ந்தது ஆனால் இந்தப் பாதையையும் 28 6 92 அன்று வெற்றிலைக்கேணியில் தொடங்கிய இராணுவ நடவடிக்கைமூலம் சிங்களப்படைகள் மூடிவிட்டன,

இதன்பின்னர் குடாநாட்டு மக்கள் கற்பனைபண்ணியே பார்த்திராத கிளாலிக் கடற் போக்குவரத்துதொடங்கியது. உயிரைப் பணயம் வைத்து கிளாலிக்கடனீரேரி யூடாக மக்கள் தமது வாழ்க்கைப் படகைஓட்டத் தொடங்கினர் பலம்பொருந்திய ஆனையிறவு பூநகரி இராணுவமுகாம்களுக்கிடையே இருந்த கொலைக் கடலைக்கடந்து மக்கள் துணிகரப்பயணம் செய்தனர்.

அவ்வபபோது சிங்கள அரசின் கடற்சுறாக்களுக்குப் பலியாக நேர்ந்தாலும் அந்த அபாயத்தினூடும் மக்களின் ஜீவனோபாயப் பயணம் தொடர்ந்தபடியே இருந்தது.

ஆனால் 2 1 93 அன்று முன்னிரவு நேரம் சிங்களக் கடற்படை நடாத்திய கிளாலிப் படுகொலை மக்களை உலுக்கியெடுத்து விட்டது. ஐம்பதிற்கும் மேற்பட்ட மக்கள் சுட்டும்- வெட்டியும் கொல்லப்பட்டனர். கடற்படையினர் தமது விசைப்படகில் இருந்தவாறே வெளிச்சங்களைப்பாய்ச்சி அபயம் கேட்ட அப்பாவிப் பயணிகளை வாள், காட்டுக் கத்தி போன்ற ஆயுதங்களினால் வெட்டிக் கொன்ற கோர நிகழ்வு மிகவும்மனிதாபிமானமற்ற காட்டு மிராண்டித்தனமான செயலாக அமைந்தது.

"நீலவண்ணக்கடலாக இருந்த கிளாலிக்கடனீரேரி செங்கடலாக மாறியது"... என வணக்கத்துக்குரிய ஆயர் கெனத்பெர்னாண்டோவைவரவேற்குமுகமாக10 1.93அன்று யாழ் சென்ஜோன்ஸ் தேவாலயத்தில் நடந்த ஆராதனை வைபவத்தின் போது வைத்தியக்கலாநிதி ஜெயகுலராஜா கூறியிருந்தார்.

கிளாலிப் படுகொலையைத் தொடர்ந்து கடற்புலிகளின் விசைப்படகுகள் கடனீரேரியில் ரோந்துவர மீண்டும் பயணிகள் போக்குவரத்து தொடங்கியது. சிங்களக்கடற்படையும்கடற்புலிகளும் அடிக்கடி கடற் சண்டையில் ஈடுபட்டனர் இதன்மூலம் கடற்படையின் நடமாட்டமும் கடனீரேரியில் பெரிதும் கட்டுப்படுத்தப்பட்டது. இருந்தாலும் பயணங்களில் தடங்கலும் அபாயமும் இருந்து வந்தன.

குடாநாட்டு மக்களின்ஒரே ஒரு போக்குவரத்துப்பாதையாக தற்போது விளங்கும் கிளாலிக்கடல் நீரேரியை தடை செய்யப்பட்ட வலயமென அரசு பிரகடனம் செய்தது. குடாநாட்டு முற்றுகையை முழுதாக இறுக்கிவிட அரசு மேற்கொண்ட இந்த நடவடிக்கைக்கு எதிராக கண்டனக் குரல்கள் எழுந்தன.

கடந்தவாரம்யாழ்ப்பாணத்திற்கு வருகைதந்த மன்னார் மறைமாவட்ட ஆயர் வணக்கத்துக்குரிய இராயப்பு யோசேப் அவர்கள். அரசின் செயலை கடுமையாக சாடியுள்ளார். குடாநாட்டின் 10 இலட்சம் மக்களை அவர்களது சொந்த மண்ணிலேயே சிறைவைப்பது போன்ற இந் நடவடிக்கை மனித விரோதச் செயல்எனஅவர் அரசைக்கண்டித்துள்ளார்.

பூநகரியில் நிலைகொண்டுள்ள படையினரை விலக்கி பொதுமக்களின் பாதுகாப்பான- சுதந்திரமான போக்குவரத்துக்கு மனிதாபிமானத்தின் பேரில் சிறிலங்கா அரசு வழிசெய்ய வேண்டுமென புலிகள் இயக்கம் பலதடவைகள் வேண்டுகோள் விடுத்துவிட்டது அத்துடன் புலிகள் இயக்கத்துக்கும் அரசுக்குமிடையில் பேச்சுவார்த்தைகள் நிகழக்கூடிய ஒரு சமாதான சூழலை உருவாக்குவதற்கு முன்னோடியாகவும் இத்தகையதொரு படைவிலக்கல் அமையவேண்டும் எனவும் புலிகள் சைகை காட்டியுள்ளனர். அண்மையில் யாழ்ப்பாணம் வந்துசென்ற கொழும்பு அங்கிலிக்கன்ஆயர் அதிவணக்கத்துக்குரிய கெனத் பெர்னாண்டோவை நேரில் சந்தித்த தலைவர் பிரபாகரன் அவர்களும் இந்த நிலைப்பாட்டை வலியுறுத்தியிருந்தார்.

ஆனாலும், படையினரை விலக்கிக்கொள்ள முடியாது என அரசு திட்டவட்டமாக மறுத்துவிட்டது. அதேவேளை தனது இராணுவ வலயத்தினூடு பூநகரி - சங்குப்பிட்டி பாதையால் பொதுமக்கள் பயணம் செய்யலாம் என சிங்கள அரசு தொடர்ச்சியாக அறிவித்துவருகிறது.

கிளாலிக் கடல் நீரேரியை தடைசெய்துவிட்டு தனது இராணுவ வலயத்தினூடாக மக்களை பயணம் செய்யும்படி அரசு கேட்பது ஏன்? இதற்குப் பல காரணங்கள் உள்ளன.

இதனூடாக குடாநாட்டிற்கும் வன்னி மாநிலத்திற்கும் மத்தியிலான புலிப்படையினரின் நகர்வையும். இயங்கும் ஆற்றலையும் தடுத்து நிறுத்திவிடலாம் என அரசு எண்ணுகிறது. இதன்மூலம் புலிகள் இயக்கத்தை இராணுவ ரீதியாக பலமிழக்கவைத்து குடாநாட்டை படிப்படியாக கைப்பற்றிவிடலாம் எனவும் அரசு தப்புக்கணக்கு போடுகிறது.

இந்ததந்திரோபாயம் நடைமுறைச்சாத்தியம் அற்றதுஎன்பதையும், இத்தடைகள் புலிகளின் நகர்வையும், இயங்கும் ஆற்றலையும் கட்டுப்படுத்திவிடாது என்பதையும் தலைவர் பிரபாகரனே அண்மையில் அங்கிலிக்கன் ஆயரிடம் விளக்கியிருக்கிறார். இது பிரத்தியேகமாக தமிழ்மக்களின் சுதந்திர நடமாட்டத்திற்குஇடப்பட்டுள்ள தடை என்பதையும் தலைவர் சுட்டிக்காட்டியுள்ளார் கொழும்பு வரையிலான புலிகளின் ஊடுருவலையே தடுத்துநிறுத்தமுடியாது திண்டாடும் அரசுக்கு உள்ளூரில் புலிகளின் நகர்வை தடுத்து நிறுத்துவது ஒரு பொழுதும் சாத்தியமாகப் போவதில்லை. எனினும் அரசுக்கு வேறுநோக்கங்களும் உண்டு.

யாழ்ப்பாணம், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் மாவட்டங்களை உள்ளடக்கிய வட தமிழீழத்தின் மக்கள் சுதந்திரமாக போராட்ட நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர் புலிகள் இயக்கத்தின் அனைத்து அரசியல் - நிருவாக அமைப்புகளிலும் பெருந்தொகையான ஆண் - பெண்கள் வேலை செய்கின்றனர். மேலும் பெருந்தொகையான மக்கள்போராட்ட ஆதரவாளர்களாகவும்- அனுதாபிகளாகவும் இருக்கின்றனர். சுருக்கமாகச்சொன்னால் வடதமிழீழத்தின் மிகப் பெரும்பாலான குடும்பங்கள் ஏதோ ஒரு விதத்தில் போராட்ட நடவடிக்கையில் தங்களை இணைத்துள்ளன. இவர்களது உறவுகளும்-தொழில்களும்- பெரும்பாலும் வடதமிழீழத்திற்குள்ளேயே இருந்துவிடுகின்றன.

ஆனால் ஆனையிறவூடாக அல்லது பூநகரியூடாக இராணுவ வலயத்தைத்தாண்டி மக்கள் பயணம்செய்யவேண்டி வந்ததால் இத்தகைய போராட்ட அபிமானிகளை, ஆதரவாளர்களை தேசபக்தர்களை போராளிக் குடும்பங்களைசிங்களப் படைகள் சுலபமாக இனங்கண்டு அழிக்க வாய்ப்பு ஏற்படும் இதற்கு இந்த இராணுவ வலயத்தில் நிறுத்தப்படப்போகும் தேசவிரோதக் குழுக்கள் உதவும் இதன்மூலம் போராட்டத்தின் பலத்தை சிதைக்கமுடியும் என அரசு கணக்குப்போடுகின்றது.

அதேவேளை பூநகரியில் நிலைகொண்டிருக்கும் இராணுவம், தேச விரோதக்குழுக்களின் துணையுடன் உளவாளிகளை உருவாக்கி மிகச் சுலபமாக தகவல்களைத் திரட்டும். பின்னர் தனது தமிழ் உளவாளிகளை, குடாநாட்டிற்குள்ளும், வன்னிப் பெருநிலத்திற்குள்ளும் ஊடுருவச்செய்து பெரும் நாச வேலைகளில் ஈடுபட வைக்கும். கொம்படிப் பாதையில் முன்னர் நடாத்திய குண்டு வெடிப்பைப் போல (10 பொதுமக்கள்கொல்லப்பட்டனர்) மக்கள் நெருக்கமாக கூடும் இடங்களில் பல குண்டு வெடிப்புகளை நடாத்தும். அதன் மூலம் மக்களின் நிம்மதியான வாழ்வைசீர்குலைத்து இறுதியில் குடாநாட்டு மக்களையேஅடிமைகொள்ள முயற்சிக்கும்.

உலகத்தின் கண்துடைப்பிற்காக, ஒரு சர்வதேச மனித உரிமை நிறுவனத்தின் மேற்பார்வையுடன் பூநகரிப் பகுதியை பாதுகாப்பு வலயமாக பிரகடனம் செய்யவும் அரசு முயற்சிக்கலாம் இதன்மூலம் பூநகரியில் புலிகளின் தாக்குதலை நிறுத்தி, அப்பகுதியில் இராணுவம் நிரந்தரமாக நிலைகொள்ளும் வாய்ப்பையும் ஏற்படுத்திக் கொள்ளலாம். பூநகரியை சமாதான வலயமாக்குவதன் மூலம் அங்கு முடங்கிக் கிடக்கும் பெருந்தொகையான இராணுவத்தினரை குடாநாட்டு ஆக்கிரமிப்புப் போருக்கு பயன்படுத்தவும் அரசுக்கு வாய்ப்பு ஏற்படும்.

இவை எல்லாம் ஒருபுறமிருக்க, பூநகரியை திறந்துவிடுவதன் மூலம். இப்பாதையூடாக குடாநாட்டு மக்களுக்கு எடுத்து வரப்படும் அத்தியாவசிய உணவுப் பொருள்களில் தனக்கு தேவையானவற்றை பூநகரி இராணுவத்தினர் பெற்றுக் கொள்ள வாய்ப்புண்டு இதனால் பல கோடிக் கணக்கில் செலவாகும் 'சப்ளை' பிரச்சினையையும் தீர்த்துவிடலாம் பூநகரி இராணுவத்திற்கு மட்டுமன்றி ஆனையிறவு தளத்திற்கும் பொருள்களை விநியோகம் செய்யவும் இதனால் வசதி பிறக்கும்.

இவற்றை எல்லாம் கருத்தில் கொண்டு தான் பூநகரியிலிருந்து படைகளை விலக்கி சங்குப்பிட்டிப் பாதையை திறக்க வேண்டுமென புலிகள் கேட்கிறார்கள். ஆனால் அதற்கு அரசு இணங்குவதாகத் தெரியவில்லை.

குடாநாட்டு மக்களின் பொருளாதார வாழ்வை சீர்குலைத்து. மக்களின் துன்பங்களுக்கு எல்லாம் புலிகள் மீது பழி சுமத்தி, மக்களுக்கும் புலிகளுக்கும் மத்தியில் முரண்பாட்டைத் தோற்றுவிப்பதும் அரசின் நோக்கம்.


படைகள் விலகாமல் பூநகரியை திறந்துவிடுவது குடாநாட்டின் பாதுகாப்பிற்கு பேராபத்தை விளைவிக்கும் என்பது புலிகளின் சரியான மதிப்பீடு. வெற்றிலைக்கேணியிலிருந்து பூநகரி வரை முடங்கிக் கிடக்கும் பல்லாயிரக்கணக்கான சிங்கள இனவாதப் பட்டாளம் குடாநாட்டிற்குள் புகுந்து விட்டால் யாழ் மாநிலம் ஒரு ரண களமாக மாற்றப்படும். அதற்கப்புறம் போககுவரத்துசுதந்திரத்தோடு உயிர் வாழும் சுதந்திரத்திற்கே ஆபத்து ஏற்படும்

குடாநாட்டு மக்களின் அனைத்துப் போக்குவரத்துப் பாதைகளையும் தடுத்து நிறுத்தி விட்டு 10 இலட்சம் மககளை சிறை வைத்திருப்பது போன்று அடைத்து வைத்திருக்கும் அரசின் மனிதாபிமானமற்ற செயலுக்கு உலகளாவிய ரீதியில் எதிர்ப்புகள் வலுத்து வருகின்றன. சிறிலங்கா அரசுக்கு உதவி வழங்கும் நாடுகளும் மற்றும் சில மனிதாபிமான நிறுவனங்களும் குடாநாட்டு மக்களின பாதையை தடை செய்ய வேண்டாமென வலியுறுத்தி வருகின்றன.

இந்த சர்வதேச அழுத்தங்களில் இருந்து தப்பிக்கொள்ளவே பூநகரி - சங்குப்பிட்டிப் பாதையை தான் திறந்துவிட தயாராக இருப்பதாக அறிவித்து சிறிலங்கா அரசு, சர்வதேச சமூகத்தை ஏமாற்ற முயற்சிக்கின்றது.

இராணுவ வலயத்தினூடு பிரயாணம் செய்வது தமக்கு பாதுகாப்பில்லைஎன்று குடாநாட்டு மக்கள் ஒன்றுதிரண்டு சர்வதேசத்திற்கு தமது ஆட்சேபக் குரலை வெளிப்படுத்துவார்களாக இருந்தால் சிறிலங்கா அரசு இறங்கிவர வேண்டிய நிலை உருவாகும். எந்த சூழ்நிலையை உருவாக்கினாலும் யாழ்ப்பாண மக்களின் உறுதிப்பாட்டை உடைத்துவிட முடியாது என சிங்கள அரசு உணரும் போது தனது விடாப்பிடியான போக்கை விட்டுக்கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும்.

**எல்லாளன்**




## கருத்தரங்கு

இன்று பி. ப. 1. 30 மணிக்கு ஏச்சுவேலி மகாவித்தியாலயத்தில் 'விவசாயத்தின் முக்கியத்துவம்' என்ற தலைப்பில் கருத்தரங்கு நடைபெற உள்ளது என்பதை சகல மாணவர்களுக்கும் விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு மருதனார்மடக் கல்விக் கோட்டத்தினர் அறியத்தருகின்றார்கள்.

## பொன்விழா

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி வாலையம்மன் சனசமூக நிலையத்தின் பொன்விழா இன்று மாலை 6 மணியளவில் மேற்படி நிலைய முன்றலில் நடைபெற உள்ளது

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக உள்ளூராட்சி உதவி ஆணையாளர் சுந்தரம் டிவகலாலா அவர்களும் சிறப்பு விருந்தினர்களாக பலாலி ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை அதிபர் ஆர். எஸ் நடராசா அவர்களும் யாழ் மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் இளம்பரிதி அவர்களும் நிதர்சன பொறுப்பாளர்பரதன் அவர்களும் கலந்து கொள்ள உள்ளனர் மேலும் இந் நிகழ்வில் கலைநிகழ்ச்சிகளும் இடம் பெறவுள்ளன.

# உலர் உணவு விநியோகம் உடன் ஆரம்பிக்க பணிப்பு

(யாழ்ப்பாணம்)

தற்பொழுது மாவட்டத்தில் நிலவிவரும் உணவுத் தட்டுப்பாட்டின் காரணமாக சகல குடும்பங்களும் குறிப்பிட்ட விலையில் கையிருப்பிலுள்ள உணவுப் பொருள்களை பெறுவதை நிச்சயப்படுத்துவதற்காக தற்பொழுது கையிருப்பிலுள்ள அரிசி, மா, சீனி ஆகிய பொருள்களை ஒரு பங்கீட்டுத் திட்டத்தின் கீழ் விநியோகிக்க திட்டமிட்டுள்ளதாக யாழ் செயலக திட்டப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். இதன்படி, நான்கும் நான்கிற்கு உட்பட்ட அங்கத்தவர்களையுடைய குடும்பம் ஒன்றிற்கு 2 கிலோ அரிசி, 2 கிலோ மா, 1/2 கிலோ சீனி என்பனவும் ஏனையோருக்கு குடும்பம் ஒன்றிற்கு 5 கிலோ அரிசி, 5 கிலோ மா, 1 கிலோ சீனி என்பனவும் விநியோகிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இத்திட்டம் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் வர்த்தகத் திணைக்கள விற்பனை நிலையங்கள் என்பனவற்றால் செயல்படுத்தப்படும் என்றும் ஒவ்வொரு பலநோக்கு கூட்டுறவு சங்கமும் தமக்கு ஒதுக்கப்பட்ட பொருள்களைப் பெற்று இந்த விநியோகத்தை ஆரம்பிக்கும்படியும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

விநியோகத்தின்போது குடும்பங்களது 'அ', 'உ' உலர் உணவு அட்டைகளின் 28ம் இலக்கத்தை இரத்துச் செய்து இந்த விநியோகத்தைச் செய்யுமாறும் தமக்கு ஒதுக்கப்பட்ட மொத்தத் தொகையையும் உடனே எதிர்பாராது தற்பொழுது கிடைத்த தொகையைக் கொண்டே விநியோகத்தை ஆரம்பிக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

மேலும் கப்பலில் பொருள்கள் இறக்கப்பட்டு வரவர மீதிப் பொருள்கள் விநியோகிக்கப்படும் என்றும் பொருள்கள் எடுக்கவரும்போது உதவி அரசாங்க அதிபரிடம் 'அ', 'உ' அட்டைகளின் உச்ச எல்லையை அத்தாட்சிப்படுத்தி வரவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இம்மாதம் 15 ஆம் திகதி முன்னர் மேற்படி விநியோகம் முடிவடைய வேண்டுமெனவும் யாழ். செயலக புனர்வாழ்வுப் பகுதி திட்டப் பணிப்பாளர் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கு அறிவித்தல் விடுத்துள்ளார். [22]

# இளங்கலைஞர் மன்ற கலாமண்டபம் திறப்பு

[யாழ்ப்பாணம்]

நல்லூர் சட்டநாதர் வீதியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள அகில இலங்கை இளங்கலைஞர் மன்றத்தின் கலாமண்டபம் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களால் திறந்து வைக்கப்படவுள்ளது.

கலாமண்டபத் திறப்பு விழாக் கிரியைகள் இன்று காலை நடைபெறவுள்ளன. இக்கிரியைகளை ஈழத்தின் பிரபல சிவாச்சாரியார்கள் அனைவரும் ஒருங்கிணைந்து நடாத்தி வைக்கவுள்ளனர். இன்று காலை 7 மணிக்கு கொக்குவிலை யடி ஞானவைரவர் ஆலயத்தில் 108 சங்காபிஷேகம் இடம்பெறவுள்ளது. இதன்போது ஈழத்தின் பிரபல நாதஸ்வர, தவில் வித்துவான்களின் இசைக் கச்சேரிகளும் இடம்பெறவுள்ளன. நாளைய திறப்புவிழா நிகழ்ச்சிகள் சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் நடைபெறவுள்ளன.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக பரமாசாரிய சுவாமிகள், யாழ். மறைமாவட்ட கத்தோலிக்க ஆயர் அருள்திரு வண. தோமஸ் சௌந்தரநாயகம், சிவஸ்ரீ மகாதேவக் குருக்கள் ஆகியோர் ஆசியுரை வழங்குகின்றனர்.

யாழ். அரச அதிபர், யாழ். பல்கலைக்கழக துணை வேந்தர் வடபிராந்திய கல்விப் பணிப்பாளர் ஆகியோர் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கின்றனர். சிறப்பு விருந்தினர்களாக யாழ் மாநகர ஆணையாளர், திவ்விய ஜீவனசங்கத் தலைவர், நல்லூர் உதவி அரசாங்க அதிபர், கொண்டலடி வைரவர் ஆலய தர்மகர்த்தா ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். அங்கு கவிஞர் திரு. சோ. பத்மநாதன், கம்பன் கழக அமைப்பாளர் திரு. ஜெயராஜ் ஆகியோரின் சிறப்புரைகளும் இடம்பெறவுள்ளன.

அன்றைய மாலை நிகழ்ச்சிகள் பிரம்மஸ்ரீ ந. வீரமணி ஐயர் தலைமையில் நடைபெறும்.

## திறப்பு விழா

காரைநகர் யாழ்ற்றன் கல்லூரியின் மண்டபத்திறப்பு விழா நாளை காலை 9.30 மணிக்கு வட்டுக்கோட்டை அடைக்கலந்தோட்டம் ஸ்ரீ கந்தசுவாமிகோவில் கல்யாண மண்டபத்தில் கல்லூரி அதிபர் திரு. ந. பரமசிவம் தலைமையில் நடைபெறவுள்ளது.

காங்கேசன்துறை

காங்கேசன் களைச் சேந்தாங்குளம் வீதி ஊடாக வாகன அணிமூலம் எடுத்து வருவதற்கு வேண்டிய ஒழுங்குகள் குறித்து சில தீர்மானங்கள் இப்பேச்சுவார்த்தையின்போது எடுக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சுமார் இருபது வாகனங்கள் ஒன்றைவிட்டு ஒருநாள் மேற்படி பகுதிக்குச் சென்று உணவுப் பொருள்களை எடுத்து வரும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்வாறான தொடர் நடவடிக்கைகளுக்கு வேண்டிய ஏனைய ஏற்பாடுகள் குறித்தும் இவ்வதிகாரிகள் குழு நடவடிக்கைகளை மேற்கொள்வர் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

அதேவேளை காங்கேசன் துறையூடான உணவுவாகனப் போக்குவரத்து மிக விரைவில் ஆரம்பிக்கப்படும் என்பதைக் கொழும்பிலிருந்து கிடைத்த தகவல்களும் உறுதிசெய்தன. (க)

உணவு

பிடி உபகரணங்கள், யாழ். இலங்கை செஞ்சிலுவை சங்கத்திற்கு 60 தையல் மெசின்களும், தகரங்களும், மற்றும் உணவு முத்திரை, ஓய்வூதியர் படிவங்களும் எடுத்து வரப்பட்டன.

மற்றும் யாழ். கல்விக் கந்தோருக்கு ஒரு மோட்டார் சைக்கிளும், யாழ். மாவட்ட விவசாய அபிவிருத்தி சமாசத்திற்கு மண்வெட்டிகள், பூவாளிகள், நீர் இறைக்கும் இயந்திரங்கள், தட்டச்சு இயந்திரங்களும் எடுத்து வரப்பட்டுள்ளன.

நேற்று கப்பலில் இருந்து பாடசாலைத் தளபாடங்கள், தபால் பொதிகள் மருந்து வகைகள் இறக்கப்பட்டன. (யோ)

# அதிகாரிகள் கெடுபிடி பொருள்கள் ஏற்றல் தாமதம்

(கொழும்பு)

உணவுப் பொருள்களை கப்பலில் ஏற்றுவதற்கான புதிய நடைமுறை வடபகுதிக்கான உணவுப் பொருள் விநியோகத்தில் பெரும் காலதாமதத்தை ஏற்படுத்தி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

வடபகுதிக்கான உணவுப் பொருள்கள் கப்பலில் காணாமல் போவதை அடுத்து வெளிநாடுகளுக்கு பொருள்களை அனுப்பும்போது எடுக்கப்படும் நடவடிக்கை போன்று சுங்கத் திணைக்களத்தினூடாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதனால் பெரும் காலதாமதம் ஏற்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை யாழ் மாவட்ட ஜெயப்பூர் நிறுவனத்திற்கு கூட்டுப்படைத் தலைமை அலுவலகத்தால் அனுமதிக்கப்பட்ட பொருள்கள் துறைமுக அதிகாரிகளின் கெடுபிடி காரணமாக துறைமுக களஞ்சியத்தில் தொடர்ந்தும் தேங்கிக் கிடப்பதாக தெரிவிக்கப்படுகிறது. (நி)

பொருள்கள்

3500 மீனவக் குடும்பங்கள் மீண்டும் தொழில் ஆரம்பிப்பதற்காக நோர்வே செஞ்சிலுவைச் சங்கத்தால் வழங்கப்பட்ட 46 மில்லியன் ரூபா பெறுமதியான டிஸ்கோவலை, ஆடைவலை என்பனவும் அடங்குகின்றன.

இவற்றை வடபகுதிக்கு கொண்டுவர ஏற்கனவே அனுமதி வழங்கப்பட்டிருந்தும் தற்போது கூட்டுப்படை தலைமைச் செயலகம் அனுமதி மறுத்துவருகின்றது. இதனால் பாதிப்படைந்த குடும்பங்களுக்கு கிடைக்கவிருந்த உதவியும் கிடைக்காது தொடர்ந்தும் ஏமாற்றமடைந்த நிலையில் பெரிதும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர் இவ்வலைகள் கடந்த ஆறு மாதகாலமாக கொழும்பில் பொதி செய்யப்பட்ட நிலையில் இருப்பது குறிப்பிடத்தக்கது. [சி நி]

பொருளாதாரம்

கடந்த ஐந்து ஆண்டுகள் துன்பம் மிக்க ஆண்டுகளாக இருந்து வருகிறது. தென்பகுதியில் தோன்றிய அரசுக்கெதிரான கிளர்ச்சி கொடுமையாக ஒடுக்கப்பட்டுவிட்டது. ஆனால் வடகிழக்கில் விடுதலைப் புலிகளுடனான யுத்தம் தொடர்கிறது உயிர்ச்சேதமும், பொருள்சேதமும் அதிகமாகி வருகின்றது என்றும்

இனவாதம் இன்று இலங்கையில் பெரும் அரசியல் பிரச்சினையாக மாறியுள்ளது சிறுபான்மைத் தமிழர்கள் மொழி, கல்வி உட்பட பல விடயங்களில் பாரபட்சம் காட்டப்பட்டதனால் கடுமையாகப் பாதிக்கப்பட்டனர். இதனால் அரசியல் அதிகாரத்தைப் பகிர்ந்தளிக்க வேண்டும் என்று அமைதியாகத் தொடங்கிய போராட்டம் இன்று இராணுவ ரீதியாக அரசுக்கு பெரும் சவாலாக மாறிவிட்டது என்றும், ஆரம்பத்தில் இருந்த பொருளாதார முறை மாற்றிஅமைக்கப்பட்டு திறந்த பொருளாதார முறை கொண்டுவரப்பட்டது. இந்த பொருளாதார மாற்றத்தோடு ஆட்சி முறையும் அதிகார ஆதிக்க ஆட்சியாக மாறிவிட்டது. இதனால் அனேக மக்கள் ஆட்சியாளரிடமிருந்து அன்னியப்பட்டு விட்டார்கள்.

வடக்கு, கிழக்கில் போர் தொடர்கிறது அரசு தனது குடிமக்கள் மீதே குண்டு வீசுகிறது. அமைதி வேண்டும் என்று கூறும் இருதரப்பாரது வேண்டுகோளிலு ஒரு வெற்றுத்தன்மை தெரிகிறது என்றும் தெரிவிக்கப்பட்டது.

## தபால் விநியோகம்

கொழும்பில் இருந்து நேற்று பருத்தித்துறையை வந்தடைந்த 'குமண' கப்பலில் எடுத்துவரப்பட்ட சுமார் 220 தபால் பொதிகளும் நேற்று மாலையே உடன் இறக்கப்பட்டு யாழ். பிரதான தபாலகம் கொண்டு வரப்பட்டது.

யாழ். பிரதான தபாலக உத்தியோகஸ்தர்களினால் பருத்தித்துறையில் இருந்து எடுத்துவரப்பட்ட இத்தபால் பொதிகள் உடன் தரம்பிரிக்கப்பட்டு இன்றே சகல இடங்களுக்கும் விநியோகிக்கப்படவுள்ளதாக யாழ் பிரதான தபாலக உத்தியோகஸ்தர் ஒருவர் தெரிவித்துள்ளார் [பா] [யோ]

## மருந்துகள் வந்தன

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு "குமண" கப்பல்மூலம் மருந்துப் பொருள்கள் எடுத்து வரப்பட்டுள்ளன.

நேற்று பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைந்த குமண கப்பல் மூலம் வடபகுதிக்கு எடுத்து வரப்பட்டுள்ள பொருள்களுள் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கான மருந்துவகைகளும் அடங்குகின்றன. இவற்றுள் கிசர்நய்க் கடிக்கான மருந்தும் எடுத்து வரப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது. இதனால் யாழ்ப்பாணம்போதனா வைத்தியசாலைக்கு ஏற்பட்டு வந்த மருந்துத் தட்டுப்பாடு ஓரளவுக்கு நீங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (சி. நி)

இரவைப்

நிலையத் துணைப் பணிப்பாளர் தெரிவித்தார்.

துருவ நாடுகளில் நீண்ட குளிர்காலத்தில் நகரங்களுக்கு பிரதிபலிக்கப்பட்ட சூரிய ஒளிக்கதிரைப் பரப்புவதற்கு வசதியளிக்கும் முறை ஒன்றை கண்டறிவதற்கு உதவும் முன்னோடி முயற்சியாகும் இது.


## மரண அறிவித்தல்

### வைத்திலிங்கம் தெய்வானைப்பிள்ளை

காரைநகர் பலகாட்டை பிறப்பிடமாகவும், திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் தெய்வானைப்பிள்ளை 4-2-93 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா வைத்திலிங்கத்தின் (பிரபல வர்த்தகர், துறைமுகம் காரைநகர்.) அன்பு மனைவியும், தியாகராசா (ஆசிரியர், புத்தூர் சோமாஸ்கந்தா கல்லூரி), நமசிவாயம் (நியூசிவாயம் நவீனசந்தை யாழ்ப்பாணம்), சிவசப்பு, தருமலிங்கம், கந்தசாமி, பரமலிங்கம், தம்பிராசா, தம்பிஐயா, பரஞ்சோதி, சிவபாக்கியம், பொன்னம்மா ஆகியோரின் அன்பு தாயாரும், அன்னம்மா (ஆசிரியை, சோமாஸ்கந்தா கல்லூரி, நாகேஸ்வரி (இளவரசி ரெக்ஸ்ரைல், நவீனசந்தை யாழ்ப்பாணம்), பரமேஸ்வரி, புவனேஸ்வரி, ராஜேஸ்வரி, திலகவதி, ராஜேஸ்வரி, சாவித்திரிதேவி, புனிதவதி, காலஞ்சென்ற வேலுப்பிள்ளை, நடராசா ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (5-2-93) வெள்ளிக்கிழமை பி. ப. 2 மணிக்கு திருநெல்வேலி சைவப்பாடசாலை வீதியில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்து செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
வை. நமசிவாயம்
நியூசிவாயம்
நவீனசந்தை,
யாழ்ப்பாணம்.

சைவப்பாடசாலை வீதி,
(ஹம்சா வீதி)
திருநெல்வேலி.
(4228)



## அழைப்பு

# கேணல் கிட்டு

திரு. சதாசிவம் கிருஷ்ணகுமார் அவர்களின் ஞாபகார்த்தமாக யாழ். அடைக்கலமாதா கோவிலில் 1993-02-06 நாளை காலை 7.00 மணிக்கு இடம்பெறும் திருப்பலிப் பூசையிலும் முற்பகல் 11.00 மணிக்கு வீட்டில் இடம்பெறும் ஆராதனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு தங்களை அழைக்கின்றோம்.

நன்றி.

அன்புடன்
மனைவி: திருமதி ஆன் சிந்தியா கிருஷ்ணகுமார்,
தாய்: திருமதி இராசலட்சுமி சதாசிவம்,
அண்ணா: திரு. சதாசிவம் காந்திதாசன்,
மற்றும் உறவினர்கள்.

128/6, பலாலி வீதி,
திருநெல்வேலி.
(4223)


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 05ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.